
# அருள் வழங்கும் தெய்வமே
# அண்ணாமலை தீபமே



விலை ரூ. 10/-

பாபநாசம் குறள்பித்தன்



மலேசியா சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள **அருளாளர் ஜோதிட மாமணி யக்னஜோதி நம்பூதிரி** சுவாமிகளுக்கு எமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை கூறி மகிழ்கிறோம்.

**L. Suresh**
**Santhi Snacks & Sweets**
155/1, Golden Jbilee Flats,
Anna Nagar West, Chennai - 40.
Ph: 620 1357, 621 2362

சுவாமிஜியின் முகவரி :
யக்ன ஜோதி அறக்கட்டளை 102, மணிராஜம் தெரு,
ஜானகி நகர், சென்னை - 87.
அ.பெ.எண் : 6979. போன் : 4862606. 4868059

# அருள் வழங்கும் தெய்வமே அண்ணாமலை தீபமே

ஆசிரியர் :
பாபநாசம் குறள்பித்தன்

பதிப்பாசிரியர் :
இரா. முருகானந்தம்
ஜெயலட்சுமி பதிப்பகம்,
W - 100, அண்ணா நகர்,
(ரவுண்டானா)
சென்னை - 600 040.
ஃபோன் : 6287275, 6221906

பாபநாசம் குறள்பித்தன்

## அருள் தீப மலை ...

இனிய ஆன்மீக அன்பர்களே வணக்கம்.

இந்த நூலை எழுதத் தொடங்கும் முன், என் இதயம் வெற்று இடமாக இருந்தது. எழுதத் தொடங்கியதும் வெற்றி இடமாக மாறியது.

அது எப்படி?.... எல்லாம் அண்ணாமலையானின் அருளே என்று இப்போது உணர்கிறேன்.

பல நூல்களை எழுதியுள்ள எனக்கு, 'அண்ணா மலை' என்று எழுதத் தொடங்கியதும் புத்துணர்வும், புதுப்பொலிவும் ஏற்பட்டது.

எழுதிய படிகளை நண்பர் திரு. **இரா. முருகானந்தம்** அவர்களிடம் கொடுத்தேன். படித்துப் பார்த்தவர் பரவசப்பட்டு இந்த நூலை வெளியிடுகிறேன் என்று வாங்கிச் சென்றார். அதன் படியே இப்போது சிறப்பாகவே வெளியிட்டும் இருக்கிறார். நன்றி!

இந்த நண்பரை என் ஊர்க்கார தம்பியும் கவிஞருமான **கி. முத்துக் குமரன்** அறிமுகப்படுத்தினார். அதோடு இந்த நூல் வெளிவர துணையாகவும், தூணாகவும் நின்றவர் இவரே. அதற்காக இந்த இனிய வேளையில் இவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலில் அண்ணாமலையானைப் பற்றிய செய்திகளோடு, உலகம் முழுதும் நிறைந்துள்ள காற்றைப்போல், உலகம் முழுதும் நின்று ஆட்சி செய்து கொண்டிருக்கும் ஈசனின் செய்திகளையும், அவனது பெருமைகளையும் இங்கே கொடுத்திருப்பதே சிறப்பானதாகும் என்றே நம்புகிறேன்.

இந்த அளவில் சிவனை, ஈஸ்வரனை யாரும் தொகுத்து சொல்லி இருக்கமாட்டார்கள் என்பதை இந்நூலைப் படிப்பவர்கள் நன்கு அறிவார்கள்.

அண்ணாமலையானை நினைப்போம்

அவனருளில் திளைப்போம் !


நட்புடன்

**'பித்தன்'**

2001-11-26

52, பக்தவத்சலம் காலனி முதல்தெரு,
சென்னை - 600 026.

# திருவண்ணாமலை



அருவி பிறக்கும் சில மலையில், அகில் பிறக்கும் சில மலையில், அண்ணாமலையிலோ அருள் சுரக்கும், அன்பு மணக்கும், எப்போதும்!

தேன் இனிக்கும். என்பதும் மலர் மணக்கும் என்பதும் எப்படி உண்மையோ அப்படியே அண்ணாமலையானின் சிறப்பும், உயர்வும், அன்பும், அருளும் உண்மையானது, தன்மையானது,


இன்பமானது. இவ்வுலக வாழ்வில் இனிதானது, புகழானது, புனிதமானது.

நமக்கெல்லாம் இதயம் கையளவுதான், ஈஸ்வரனின் இதயமோ அன்பு மலையாக - அண்ணா மலையாகவே இருக்கிறது.

அதனால்தான், இந்த இதயத்தை நோக்கி - அண்ணாமலையை நோக்கி அகிலம் முழுதும் இருந்தும் ஆன்மீக இதயங்கள் அருள் வேண்டி வருவதைக் கண்ட ரமண மகரிஷி, "உலகத்தின் இதயம் அண்ணாமலை" என்று சொன்னார்.

தேவாரத்தில் சம்பந்தர் அண்ணாமலையின் தலவரலாற்றை இப்படி விளக்குகிறார் :

உண்ணாமுலை யுமையாளொடு
முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள்
மழலைம்முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறமே.



இத்தலம், பஞ்சபூத தலங்களுள் நடுநாயகமான அக்கினித் தலமாகவும், ஆறு ஆதாரத்தலங்களுள் பூரகத்தல மாகவும், முக்தி தலங்கள் நான்கினுள் நினைத்த மாத்திரத்தில் முக்தி தர வல்லதாகவும், நடு நாட்டுச் சிவத்தலங்கள் இருபத்திரண்டினுள் 22-வதாக எண்ணப்படுகிறது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையிலும் சிறப்புடைய தலமாக திருவண்ணாமலை திகழ்கிறது.

அருவுருத் திருமேனியான லிங்க வடிவில் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட வெளிச்ச மலையாக சிறப்புப் பெற்று விளங்கும் தலமாக திருவண்ணாமலை புகழ் பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு மனிதரும் தம் வாழ்வில் பெற விரும்பும் பேறுகளில் முன் நிற்பது முக்தி பேறுதான். ஒருவர் உள்ளத்தில் நினைத்த அளவிலேயே தாய் நிலையில் இருந்து முக்தி அளிக்கும் சிறப்பிற்கும், உயர்விற்கும் உரிய மலை திருவண்ணாமலையே!



ஓம்



இந்திய திருநாட்டில் இருக்கும் சிறப்புற்ற அறுபத்தி எட்டு சிவத் தலங்களில் திருவண்ணாமலையும் ஒன்று.

இந்த 68 தலங்களான - காஞ்சி, கயா, காசி, இராமேஸ்சரம் - இப்படி உள்ள சிவத்தலங்கள் அனைத்திற்கும் ஒருவர் சென்று நீராடி யாகம் செய்து, தானம் செய்து வழிபடுவது என்பது அரிய செயலாகும்.

ஆனால், எந்தத் தலத்திற்கும் செல்லாமல் இந்த தலத்திற்கு வந்தாலே இல்லை இல்லை இருந்த இடத்திலிருந்து. அண்ணாமலையானை நினைத்தாலே முக்தி கிடைக்கும் மலை திருவண்ணாமலையாகும்.

ஒருவர் ஒருமுறை இத் தலத்திற்குச் சென்றால், அவர் மீண்டும் மீண்டும் இத்தலம் நோக்கி வருவர். அப்படி ஒரு அருள் சக்தி காந்த சக்தி உண்டு. அதனால், இந்த மலையை காந்த மலை என்றே அழைக்கலாம்.


இத்தலம் எண்கோண வடிவில் அமைந்துள்ளது. மலையின் சுற்றளவோ எட்டு மைல். மலை வழிப் பாதையிலுள்ள லிங்கங்களோ எட்டு. எட்டு திசையிலிருந்து பார்த்தாலும் மலையின் அமைப்பு காண்போரை மலைப்பில் ஆழ்த்துவதாய் இருக்கிறது.

மலை என்றால் கொடிய விலங்குகள் இருக்கும். நச்சுத் தன்மை கொண்ட மரங்களும் செடி கொடிகளும் இருக்கும். அப்படி இங்கே ஏதுமில்லை. இருப்பவை எல்லாம் பயன் தரும் தருக்கலே, தீர்த்தங்களே, நன்னீர்ச் சுனைகளே, குகைகளே.

அக்குகைகளில், விருப்பாட்சிக் குகை, நமச்சிவாயர் குகை, பவழக் குகை, என பத்துக்கும் மேற்பட்ட குகைகள் இருக்கின்றன.

முலைப்பால் தீர்த்தம், பீம தீர்த்தம், பாத தீர்த்தம் என பல தீர்த்தங்கள் உள்ளன.

இங்குள்ள பாறைகளில் மயிலாடும்பாறை, ஆமைப்பாறை, வழுக்குப்பாறை போன்றவை முக்கிய மானவையாகும்.



அல்லிச் சுனை, அரளிச் சுனை, அத்திமரச் சுனை என பல்வேறு சுனைகள் உள்ளன.

இம்மலையில் பல்வேறுபட்ட பிணிபோக்கும் மூலிகைகள் நிறைந்து வளர்ந்துள்ளன.

குகை நமச்சிவாயர் கோயில், பச்சையப்பன் கோயில், அரவன் கோயில் என பல கோயில்களுமுண்டு.

இப்படி மலை முழுதும் கண்கொள்ளாக் காட்சிகள் இந்த மலை எங்கும் இருந்து மகிழ்விக்கின்றன,

இதனால்தான் இங்குள்ள குகைகளில் முனிவர்கள் தவமேற் கொண்டு தங்களது பிறவிப்பயனை சிறப்பாக்கி இருக்கிறார்கள்.

இது ஏழைகளிடத்து கருணை கொண்ட மலை. கேட்பதை கொடுக்கும் மலை, யமனை உதைத்த மலை அமுதாய் காட்சியளிக்கும் மலை, எப்போதும் அன்பர்கள் மனதில் நின்று நிலைத்த மலை என்று பெரியோர்கள் பேசுகிறார்கள்.

சீர்காழியில் பிரமபுரீஸ்வரராகிய லிங்கவடிவம் பரமனுக்கு மனமாகவும், கட்டு மலையில் உள்ள தோனியப் பராகிய உமையுடன் கூடிய ஈசனே வாக்காகவும் அதற்கு தென்பால் அமைந்த சட்ட நாதராகிய சங்கமர் (அடியார்) வடிவே உடம்பாகவும் விளங்குதலைக் கண்டு வணங்கலாம்.

இந்தியாவிலுள்ள பன்னிரு ஜோதி லிங்கங்களில் ஒன்று உஜ்ஜயினியில் உள்ள மகா காளேஸ்வரர் கோயிலில் இருக்கிறது. கோயில் குளத்தில் சுமார் 9 மீட்டர் உயர திரிசூலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கோயில் நிலவறையில் பூமிக்கு கீழே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது லிங்கம்.

# கார்த்திகை தீப மலை

கார்த்திகை தீப விழா மிகவும் பழமையான ஒரு விழாவாகும். இதற்கு பல இலக்கியச் சான்றுகள் உள்ளன, ஒல்காப் புகழ் கொண்ட தொல்காப்பியம் 'வேலினொக்கிய விளக்கு நிலையும்' என்று வாயாற புகழ்கிறது.

இது கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு என்று நச்சினார்க்கினியர் மேலே குறிப்பிட்ட செய்யுளுக்கு உரை கூறுகிறார்.

சைவ நூல்களில் மட்டுமல்ல சமண நூலிலும் கார்த்திகை தீப விழா போற்றப்படுகிறது.

சங்கப் பாடல் ஒன்றில் 'குடத்து விளக்கே போற் கொம்பனார் காமம் புறப்பட்டா பூந்தார் வழுதி - புறப்படின் ஆபுகு மாலை அணிமலையில் தீயே போல் நாடறிகெளவை' தரும்

(முத்தொள்ளாயிரம்)

கார்த்திகை மாதம் பெளர்ணமி திதி முழு மதி நாளில் தான் தீபோற்சவம். கார்த்திகை பெளர்ணமியில் என்ன சிறப்பு ? அதற்கு ஒரு வரலாறு உண்டு.

முன்னொரு காலத்தில் தாரகாசுரனது புதல்வர் மூவர். அந்த மூவரின் பெயர் முறையே கமலாக்ஷன், தாரகாக்ஷன், விதிதியுன்மாலி என்பதாகும்.



இந்த மூவரும் சாகாவரம் வேண்டி பிரம்ம தேவனை நோக்கித் தவம் இருந்தனர்,

பரமன் ஒருவனைத் தவிர இந்திராதி தேவரும் எவ்வுயிரும் ஒரு நாள் மறைந்தே போகவேண்டும். ஆதலால் என்றும் சாகா வரம் கிட்டாது என்று நான்முகன் அவர்களிடம் கூறினார்.

அங்ஙனமாயின், "பொன், வெள்ளி, இரும்பு இவற்றால் ஆன மூன்று நகரங்கள் வேண்டும். நாங்கள் விரும்பிய படியே அவை எங்கும் பறந்து செல்ல வேண்டும். பரமனே நேரில் வந்து அழிக்க விரும்பினால் தான் நாங்கள் அழியலாம்" என்று அம்மூவரும் வரம் பெற்று வந்தனர்.

வரம் பெற்ற அகம் பாவத்தில் அம்முப்புறங்களின் வல்லமை ஒரு புறம் தங்களது ஆற்றல் இம்மூன்றும் கூடிக் கொள்ளவே மூவரும் பொன், வெள்ளி இரும்பினாலாகிய புறங்களில் அமர்ந்து விண்வெளியிலே பறந்து சென்றனர்.

அப்படி பறந்து சென்ற போது ஓர் இடத்திலே அம்மூவரும் திரிபுரங்களுடன் இறங்கினார்கள். விமானம் பூமியில் விழுந்தாலே அந்த இடம் நாசமாகும். அப்படி இருக்கும் போது ஒரு நகரில் முப்புர விமானங்களும் விழுந்தால் என்னவாகும் ? நகர மக்கள் நடு நடுங்கினர். தேவர்களுக்கும் அச்சம் முளைத்தன.

மூன்று வீரர்களையும் அழிக்க பரமனும் துணை நின்றார். பண்பரந்த பூமியே இரதம். சூரிய சந்திரர் அந்த இரதத்தின் கால்கள். நான்கு வேதங்களும் குதிரைகள், நான்முகனே சாரதி. பொன் மலையான மேருவே வில். உலகையளந்து உலகினைக் காக்கும் நாராயணனே அம்பு!

இவ்வளவு ஆற்றலையும் தேடிய பரமன் முப்புறங்களையும் பார்த்து நகைத்தான். எல்லாம் வெந்து சாம்பலாயின.

தவ வலியால் அகம்பாவம் கொண்ட மூவரும் ஒரு கார்த்திகை பௌர்ணமியன்று அழிந்து ஒழிந்தனர். அது கண்டு அமரரும் மக்களும் பிற உயிர்களும் நிம்மதி அடைந்தனர். இத்தகைய நன்னாளை நாம் மறவாதிருக்கவே கார்த்திகை தீபம் ஏற்றி விழாவாக கொண்டாடுகிறோம்.

சாந்தத்தில் தோன்றிய நகையே முப்புறங்களை அழித்தது - எரித்தது.

பரமனது நகையொலி எங்கும் பரவியது. அதன் நினைவாகவே ஆலயத்திலும், வீட்டிலும் தீப வரிசை வைக்கிறோம். கார்த்திகை மாதம் முழுவதும் கங்கைக் கரையிலே தீபம் ஏற்றுவது உண்டு. இன்றும் வட நாட்டில் எல்லா இடங்களிலும் தீபவொளியை ஏற்றுகிறார்கள்.



திருவண்ணாமலையில் கார்த்திகை தீப விழா பத்து நாட்கள் நடக்கின்றன. பத்தாம் நாளில் மலையின் மீது தீபம் ஏற்றப் படுகிறது.

அண்ணாமலையாரின் கருவறையில் ஏற்றப்படும் கற்பூர ஒளியில் இருந்து ஒரு மடக்கில் நெய்த்திரியிட்ட விளக்கு ஏற்றப்படும். நந்தி தேவர் முன்னிலையில் மடக்குகளில் ஏற்றப்படும் ஐந்து றெய் விளக்குகளும் பஞ்ச மூர்த்தங்களைக் குறிக்கும்.

அம்மன் சன்னதியில் ஏற்றப்படும் ஐந்து நெய்த்திரி மடக்குகளும் பஞ்ச சக்திகளைக் குறிக்கும்,

மாலையில் எல்லா தீபங்களும் ஒன்று சேர்க்கப்படும். அனைத்தும் அவனில் ஐக்கியம் என்ற உண்மையை விளக்குவதே இதன் பொருளாகும்.

இப்படிஏற்றிய தீபங்களை கோவில் கொடி மரம் அருகே ஒன்று சேர்க்கப்பட்ட தீபங்களை அடையாளமாக அசைக்க மலை மீது கார்த்திகை தீபம் ஏற்றப்படுகிறது.

விண்ணோக்கி எரியும் தீப ஒளியை பார்க்கும் மக்கள் அண்ணாமலைக்கு அரோகரா என்று மெய்யுருக மனமுருக வணங்கி வாழ்த்தி மகிழ்வர்.

திருவண்ணாமலை தீபத்தை சர்வாலய தீபம் என்றும், கார்த்திகை விளக்கீடு என்றும் கூறுவர்.

எல்லாம் நிறைந்த பரமேசுவரி இவ்வுலகம் வந்து தங்கி முப்பத் திரண்டு அறங்களை வளர்த்ததால் இங்கே முப்பத்திரண்டு தலங்கள் விளக்கம் பெற்றன.



அண்ணாமலை தீபத்தைக் காணும் மக்கள் அனைவரும் எல்லா நலமும் வளமும் பெறுவார்கள் - பெற்றுவருகிறார்கள்,

தீபத்தை வணங்குகின்ற போது, 'என்றும் உனது நினைவோடு வாழும் நிலையை எமக்கு அளித்திடுக' என்று ஈஸ்வரனிடம் வேண்டுவது நல்லது.

அண்ணாமலையாரின் பத்தாம் நாள் விழாதான் கார்த்திகை தீபப் பெரு விழாவாகும். திருவண்ணாமலையை ஆதாரமாகக் கொண்டு, அன்றிரவு தமிழகமெங்கும் உள்ள அனைத்து ஆலயங்களிலும் சொக்கப்பனை ஏற்றப் படுகிறது.

ஆதவன் மறைந்து இருள் மெல்ல மெல்ல படரும் வேளையில், முன் பனித்தூவ, வானில் முழுமதி முகம் காட்ட, சிவாச்சியார்கள் ஆரத்தி ஏந்தி வந்து ஈசனுக்கு காண்பிக்க, அதே நேரம் வேட்டு சப்தம் கிளம்ப கார்த்திகை தீப ஒளி ஏற்றப்படும்.

இந்த ஒளி விழாவை மலையில் இருப்போர் மட்டுமல்ல, பக்கத்து கிராமங்களில் உள்ளவர்களும் கண்டு, 'அண்ணாமலைக்கு அரோகரா' என்று விண்ணதிற ஒலி எழுப்பி ஒளி தீபத்தை வேண்டி நிற்பர்.

## நேருக்கு நேர்

◆ திருவெண்காட்டில் மட்டும் தான் சிவனுக்கும் அம்பிகைக்கும் எதிர் எதிராக சந்நிதிகள் அமைந்து இருக்கின்றன. சாதாரணமாக அம்பிகை சந்நிதி சிவனுடைய இடது புறமாகத்தான் இருக்கும். நாயக்க மன்னர்கள் தாங்கள் கட்டிய கோயில்களில் வலது புறம் அமைத்தார்கள். வலது புறம் இருக்கும் தேவியர் கையில் தாமரையும் இடது புறமிருக்கும் தேவியர் கையில் நீலோற்பவ மலரும் இருக்கும்.


# மலை (கிரி) வலம் வருவோம் மனமகிழ்வு பெறுவோம் !



தில்லையில் காண, காசியில் இறக்க
சிறக்கும் ஆரூர்தனில் பிறக்க
எல்லையில் பெருமை அருணையை நினைக்க
எய்தலாம் முக்தியன்றுரைத்தீர் !

- அருணாச்சல புராணம்

திருவாரூரில் பிறப்பதும், சிதம்பரத்தை தரிசிப்பதும், காசியில் இறப்பதும் முக்தியே. ஆனால் இருந்த இடத்திலேயே அண்ணாமலையார் என்று மனமுருகி நினைப்போருக்கு முக்தி தரவல்ல ஒரே இடம் திருவண்ணாமலையே.



முத்திரி, சிவலோகம், அருணாசலம், திருவருணை எனப்பல பெயர்களால் அழைக்கப்படும் திருவண்ணாமலையில் உண்ணா மலையம்மன் சமேத அண்ணா மலையார் குடிகொண்டுள்ள அருணா சலேசுவரர் கோவிலுள்ளது.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் முடிவில் கட்டப்பட்டதாக கருதப்படும் இங்கு, தமிழகத்தில் உள்ள கோபுரங்களில் 2-வது உயரமான ராஜகோபுரம் (217அடி) அருணாசலே சுவரர் கோவிலில் கிழக்கு திசையில் கட்டப்பட்டுள்ளது.

கோவிலை ஒட்டியுள்ள மலைக்கு 'அண்ணாமலை' என்று பெயர். இது ஒரு காலத்தில் 'பொன் மலையாக' இருந்ததாகக் கூறப்படுகிறது.

அதாவது, பிரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் இடையே, உலகில் யார் பெரியவர் என்ற போட்டி ஏற்பட்டது. அவர்களுக்கிடையே புகுந்த சிவபெருமான் "என்னுடைய அடி (பாதம்) மற்றும் முடியை முதலில் யார் கண்டு பிடிக்கிறார்களோ? அவர்களே பெரியவர்" என 'ஜோதியாய்' நெருப்புப் பிழம்பாய் நின்றார். அதன் பின்னர் இம்மலை மாணிக்க மலையாகவும், பொன்மலையாகவும் தற்போது கல்மலையாகவும் ஒவ்வொரு யுகத்திலும் மாறியதாகக்கூறப்படுகிறது.

திருவண்ணாமலையிலுள்ள ராஜகோபுரத்தில் தொடங்கினால் கிரிவலத்தை நான்கு முதல் ஐந்து மணிக்குள் வலம் வந்திடலாம். மலையைச் சுற்றியுள்ள லிங்கங்களுக்கு கற்பூரம் ஏற்றி வணங்குதல் வேண்டும்.

இரண்டு சக்கர வாகனம் என்றால் ஒரு மணி நேரமும், காரில் என்றால் ஒன்றறை மணி நேரமும் ஆகும்.

இதில் நடைவலமே உடல் நலத்திற்கும், மனவளத்திற்கும், பக்தி சிறப்பிற்கும் நல்லது என்று நம்முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள்.

அண்ணாமலையின் உயரம் 2668 அடியாகும். சுற்றளவு 14 கிலோமீட்டர் தூரமாகும்.

இரவு 9 மணிக்குமேல் நிலவொளியில் வலம் வருவதே சிறந்தது. ஏனென்றால், நிலவொளியில் சந்திர பகவான் 16 கலைகளுடன் பரிபூரணமாக பிகாசிக்கின்றான். அந்த கிரணங்களை ஒரு மனிதன் தன் உடலில் ஏற்றால், அவனுக்கு அற்புதமான மனோசக்தியும், கபோபலனும், தெய்வபலனும் கிடைக்கும்.

அருணாசலேசுவரரே தன்னுடைய மேனியான மலையின் மீது நிலவின் அமிர்த கதிர்களைப் பெற்று அதை மலையை வலம் வரும் ஒவ்வொரு மனிதருடைய உடலிற்கு ஏற்றவாறு அளிக்கிறார்.


மலையை சுற்றி வரும் அன்பர்கள் 'அருணாசல சிவா, அருணாசல சிவா, அண்ணாமலைக்கு அரோகரா! உண்ணாமலை அம்மனுக்கு அரோகரா!' என அவரவர் மனதில் சொல்லிக் கொண்டே கிரிவலம் வரவேண்டும்!

மலையைச் சுற்றி பல லிங்கங்கள் உள்ளன.

அவற்றில் சில லிங்கத்தைப் பற்றிய வரலாற்றை அறிவது சிறந்தது.

**இந்திர லிங்கம் :** இந்திரன் தன் பதவியை நிலை நாட்டும் பொருட்டு திருவண்ணாமலையை அங்கபிரதட்சண முறையில் மலையை வலம் வந்தார் அப்போது அவருடன் ஓர் இடத்தில் தங்க நிறம் பெற்றது. அப்போது அண்ணாமலையாரை வணங்கி தன் இந்திர பதவியை காப்பாற்ற வேண்டினார். ஈசனும் சுயம்புலிங்கமாய் அவருக்கு காட்சி அளித்து அருள் புரிந்தார்.

புதிதாக வேலைக்கு சேர்வோர் மாற்றாலாகிப் போவோர், பதவி உயர்வை ஏற்போர், ஒரு பணியை விட்டு அடுத்தப் பணிக்குச் செல்வோர், தங்களுடைய பணிகளில் எவ்வித துன்பங்களும், தவறுகளும், வீண் பழி வராமல் இருப்பதற்கும் இந்திர லிங்கத்தை வழிபடவேண்டும்.





**அக்னி லிங்கம் :** பல யுகங்களாக அங்கபிரதட்சணம் செய்து மூன்று ருத்ர மூர்த்திகளின் திருமேனிகளும் ஜோதியாக மாறியது. அவர்கள் ஒரு புனிதமான செவ்வாய் அன்று கிரிவலம் வரும்போது தங்கள் உடல் பரிபூரணமாக பனிமலையில் இருப்பது போல் குளுமை பெற்றனர். அந்த குளுமை பெற்ற இடத்தை தோண்ட அதில் சுயம்பு வடிவில் சிவலிங்கம் ஒன்றைக் கண்டு வணங்கினர். இதுவே அக்னி லிங்கமாக இன்றும் காட்சி யளித்து வருகிறது.

கற்பு, சத்யம், தர்மம் இம் மூன்றையும் இந்த லிங்கத்தை வணங்குதல் மூலம் பெறலாம்.

**வருணலிங்கம் :** வருண பகவான், அண்ணாமலையை முட்டிப் பிரதட்சணமாகவும், ஒற்றைக் காலால் தத்தியவாறும் மலை வலம் வந்தார். அப்போது சூரியலிங்கத்தை அடுத்த ஓரிடத்தில் வருகையில் நீரூற்று வானத்தைத் தொடும் அளவு உயர்ந்தது. அந்நீரை தெளித்து அண்ணா மலையாரை வணங்கினார்.

அதனருகில் ஒளிமயமான அழகிய வடிவில் லிங்கம் ஒன்று தோன்றியது. அதுவே வருணலிங்கம். இதை இன்றும் மலையில் மேற்கு திசையில் காணலாம். இந்தலிங்கத்தை வணங்குவதால் தண்ணீரினால் விளைகின்ற தோஷங்களும், சிறுநீரக நோய்களும், சர்க்கரை நோய் மற்றும் நீர் நோய்களும் நீங்கி நலம் பெறலாம்.

**குபேரலிங்கம் :** குபேர பகவான் தியானத்தில் ஆழ்ந்து, சிரசுக்கு மேல் இரு கரங்களையும் கூப்பியபடி குதிகால் நடையாக மலை வலம் வந்திட பல யுகங்களுக்குப்பின் ஒருநாள் விஷ்ணுவும், லட்சுமியும் சேர்ந்தே

அருணாசலேசுவரரை சக்கரபாணி கோலத்தில் தரிசனம் செய்யும் காட்சியை கண்டார்.

அதே இடத்தில் ஒரு சுயம்பு லிங்கம தோன்றியது அதுவே குபேரலிங்கமாகும்.

பணத்தை முறையற்ற வழிகளில் செலவிட்டோர், முறையற்ற வழிகளில் ஈட்டியவர்கள் முறையற்ற தீய காரியங்களில் செலவழிப்போர்கள் இந்த லிங்கத்தை வழிபட்டால் பிராயச்சித்தம் கிட்டும். குபேர தீர்த்தத்தில் மூழ்கி தரிசித்து வந்தால் கோடீஸ்வரர் ஆகலாம்.

ஈசானிய ருத்ரர் என்ற தேவர், கண்களை மூடியவாறே பலயுகங்களாக திருவண்ணாமலையை வலம் வந்து கொண்டிருந்தார். அப்போது ஓரிடத்தில் யாரோ குலுங்கி அழும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார். அதிகார நந்தீஸ்வரர், அருணாசலத்தை வலம் வந்து தரிசனம் பெற்று மகிழ்ந்த இடம் இது அதனருகில் அவஷத தீர்த்தீஸ்வரராக ஒரு லிங்கம் முளைத் தெழுந்தது.


இந்த லிங்கத்தை வணங்கு வதால் ஏழரை நாட்டு சனீஸ்வரரின் தொல்லைகளில் இருந்து காப்பவரே ஈசானிய லிங்க மூர்த்தி.

கருப்பு ஆடையணிந்து ஊனமுற்றோர்க்கு தானம் அளிப்பது, நல்ல பலனைத் தரும்.

கிரிவலம் செல்பவர்கள் நன்னீரில் நீராடி, தூய ஆடை அணிந்து நித்திய பூசைகளை முடித்து வலம் தொடங்க வேண்டும்.


நெற்றிக்கு மஞ்சள், திருநீறு, குங்குமம் இட்டுக் கொள்ள வேண்டும்.

ஆண்கள் மேலாடை அணியாது வலம் வருவது நல்ல பலனைத் தரும். மிதியடியையும் தவிர்ப்பது நல்லது.



அருணாசலத்தை வலம்வர வேண்டும் என்ற நினைவோடு ஓரடி எடுத்து வைப்பவர்க்கு யாகம் செய்த புண்ணியம் கிட்டும்.

எல்லா மாதங்களைவிட மார்கழி மாதமே சிறந்த மாதமாகக்



கருதப்படுகிறது. அதனால், மார்கழியில் ஒரு நாள் ஓரே ஒருமுறை கிரிவலம் வந்தால் ஓராண்டு முழுதும் வலம் வந்த பலன் கிட்டும்.

கிரிவலத்தில் ஈடுபடுகின்றவர் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் ஆயிரம் அசுவமேதயாகப் பலனைத்தரும் என்று புகழ்கிறது அருணாசலப் புராணம்.

கிரிவலத்தில் ஒரடி வைத்தால் நமது மனதில் தேங்கிய மாசுகள் நீங்கும். இரண்டடி எடுத்து வைத்தால் கொடிய சொற்களால் வந்த பாவங்கள் நீங்கும். மூன்றாமடி எடுத்து வைத்தால் நம் உடலால் - உள்ளத்தால் செய்த தீங்குகள் நீங்கும்.

கிரிவலத்தை காலை மூன்று அல்லது நான்கு மணிக்குத் தொடங்கினால் வலம் வருவோர்க்கு நினைத்த காரியங்கள் கைகூடும்.

கால் மனிதருக்கு இருப்பதே கிரி வலம் வருவதற்கே என்று எண்ண வேண்டும். அப்படி வலம் வராக்கால்கள் இருந்து என்ன, இல்லாமல் போனாலென்ன?

ஒருவர் அறிவும், அழகும் பெற வெண்டின் கிரிவலம் வந்தாலே போதும்.

கற்புடைய மாதரைப் பெறவும், கல்வியில் சிறந்த பிள்ளைகள் பெற்று மகிழவும் கிரிவலம் அருள்புரியும்.

மலையை இடமிருந்து வலமாக கிரிவலம் வரவேண்டும். அப்படி வரும் போது போதைப் பொருட்களை எந்த வடிவத்திலும் உபயோகப் படுத்தல் கூடாது.

இறைவன் இங்கு மட்டுமே மலையாகவும், லிங்கமாகவும், ஜோதியாகவும் எழுந்தருளி சிறப்பிக்கின்றான். அதனால்தான் இந்த மலையைச் சுற்றிவர எல்லா நலனும் மக்களுக்கு விளைகின்றன.

விடியற்காலையில் வலம் வருவோர் நினைத்த காரியங்கள் வெற்றியடையும். மாலை வேளையில் வலம் வருவோரின் தன தான்யம் பெருகும்.

மனித உடல் ஒன்பது வாயில் களைக் கொண்டது. இங்கே உள்ள கொடிமரங்களின் எண்ணிக்கையும் ஒன்பது. இதே போன்று திருவண்ணா மலை செல்லும் சாலைகளும் ஒன்பது.

கிரிவலம் வரும்போது மூலிகை மணமும் விபூதி மணமும் வீசும். இதை இரவில் கிரிவலம் வருவோர் நன்கு உணர்வர்.

கிரிவலம் வருவோர்க்கு மனத் தூய்மை மிக முக்கியமானது. அந்த நேரத்தில் கோபதாபங்களைத் தவிர்த்தல் வேண்டும். தீய சிந்தனைகளை சிந்தையை விட்டு அகற்ற வேண்டும். அப்படி ஒருவர் செய்தால்தான் கிரிவலம் நல் வலமாக அமையும். அவர்கள் நினைக்கின்ற காரியங்கள் வெற்றிஅடையும்.

கிரிவலத்தில் தனித்து செல்வது நல்லது. அந்த நேரத்தில் இறைவனை மட்டுமே இதயத்தில் நினைத்துச் செல்வது அதனினும் சிறந்தது. கூட்டாகச் செல்வது என்றாலும் வீட்டுச் சிந்தனைகளை, விவகாரப் பேச்சுக்களையும் தவிர்த்து 'அவன்' சிந்தனையோடு செல்லுதல் நல்லது, நற்பயன் அடைய வல்லது.



# வலம் வந்த வண்டு



◆ மகா சிவ பக்தரான பிருங்கி மகரிஷி ஒரு நாள் சிவனை தரிசிக்கச் சென்றபோது அம்பிகையும் உடன் இருந்தார். சிவனும் பார்வதியும் நெருங்கி அமர்ந்திருந்தனர். பிருங்கி ரிஷிக்கோ சிவனை மட்டுமே வலம் வரவேண்டும் என்பது விருப்பம். எனவே வண்டு உருவம் எடுத்து சிவனை மட்டும் வலம் வர ஆரம்பித்தார். அதைக் கண்டு அம்பிகைக்கு ஏக கோபம் ஏற்பட்டது. சக்தியை அவமதித்து விட்டதால் (அவர்) வண்டு உடம்பில் இருந்த சக்தியை எடுத்துவிட சக்தியிழந்து ரிஷி கீழே விழுந்தார். அதைக் கண்ட சிவன், தன் பக்தனை விட்டுக் கொடுக்காமல் சிவமும், சக்தியும் பிரிக்க முடியாத ஒன்று எனக் கூறி அர்த்த நாரீஸ்வரராக காட்சியளித்து மறைந்தார். இந்த தத்துவ அடிப்படையில்தான் கோதாரி நோன்பு கொண்டாடப்படுகிறது.

# மலையைச் சுற்றி ....

◆ கைலாய மலையானது, சிவபெருமான் அவரது துணைவி பார்வதி ஆகியோர்களின் இருப்பிட மாகவும், தெய்வ சக்தியின் மகிமையை பிரதி பலிப்பதாகவு மிருக்கிறது. இங்குதான் இறைவன் பூமியாக அவதரிப்பதாகவும் கருதப்படுகிறது. ஆயிரம் ஆண்டு காலமாக, யாத்திரிகர்கள் பழங்கால வழிபாட்டு முறைப்படி இந்த மலையை சுற்றி பிரார்த்தனை செய்து வருவது இந்த நாள் வரை தொடர்ந்து வருகிறது.



கும்பகோணத்துக்கு அருகிலுள்ள கோட்டையூரில்தான் கோடீஸ்வரர் எழுந்தருளி உள்ளார். ஆமணக்கு கொட்டை செடியின் கீழ்லிங்கம் வெளிப்பட்டதால் கொட்டையூர் என பெயர் பெற்றது.

பாதநாராயணபுரி என்ற வானாதுறை என்னும் தலம் கும்ப- கோணத்தில் கிழக்குபுறத்தில் உள்ளது. வங்காள தேசத்தவர்கள், இங்கு வந்து பாணபுரீஸ்வரர் என்ற பெயரிலும் அம்மனுக்கு சோம கலாம்பிகை என்ற பெயரிலும் ஆலயம் எழுப்பினர். வங்க மொழியில் 'வ' என்ற எழுத்து கிடையாததால் வாத நாராயண சுவாமி என்ற பெயர் பாத நாராயணர் என்று ஆகிவிட்டது.

## சிவ தரிசன நேரங்கள் - பலன்கள்

காலை - பிணி தீரும் நண்பகல் - தனம் பெருகும்
மாலை - பாவம் அகற்றும் அர்த்த சாமம் - வீடுபேறு அளிக்கும்

## ஐந்து லிங்கம்

- சுயம்பு-தானே தோன்றியது
- காணபம்-பூத கணங்களால் பூஜிக்கப் பெற்றவை
- திவ்வியலிங்கம்-தேவர்களால் பூஜிக்கப் பெற்றவை
- ஆரிஷம்-ரிஷிகளால் போற்றப்பட்டவையாகும்
- பவலிங்கம் - மானுடர்களால் நிறுவப் பெற்றவை


## பெருமானை வணங்குதற்குரிய காலங்கள்

உஷக் காலம் - மார்கழி மாதம்
பிராதக் காலம் - தை மாதம்
மத்தியான்மை - சித்திரை மாதம்
சாயரக்ஷை - ஆடி மாதம்
அர்த்தஜாமம் - ஐப்பசி மாதம்

## சிவ பூஜைக்குரிய வார நைவேத்தியம் !



ஞாயிறு - பாயசன்னம்
திங்கள் - வெண்பொங்கல்
செவ்வாய் - எள்ளன்னம்
புதன் - சர்க்கரைப் பொங்கல்
வியாழன் - தயிரன்னம்
வெள்ளி - சுத்தன்னம்
சனி - உளுந்தன்னம்



## சமயக் குரவர்களும், திருமறைக்காடும்

சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் சேர்ந்து வந்து திருமறைக்காடு ஈசனை வழிபட்டு தேவாரப் பாடல்கள் பாடி உள்ளனர். அருணகிரி நாதர் இங்கு வந்து முருகன் மீது திருப்புகழ் பாடியுள்ளார்.

திருவிளையாடல் புராணத்தைப் பாடிய பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தவர். இவர் வேதாரண்ய புராணம் எனும் நூலையும் எழுதியுள்ளார். வைணவப் பெரியவர் அகோரத் தேவர் திருமறைக்காட்டு புராணத்தை எழுதியுள்ளார்.

**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே".**

என்று பாடிய தாயுமானவர் சுவாமிகள் பிறந்தது வேதாரண்யத் தில்தான். சித்தர் சிவப் பிரகாசர் திருவாடுதுறை ஆதீன முதற்குறவர் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திக்கு அருளுபதேசம் கிடைத்ததும் இத்தலத்தில் தான்.

## வீணாதர தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் வீணை வாத்தியத்தை ஏந்திய தோற்றத்தில் சிற்டங்களாகவும், செப்புத் திரு மேனியாகவும் பல கோயில்களில் காணலாம்.

சிவபெருமான் தட்சிணா மூர்த்தியாக இருக்கும் பொழுது தும்புரு நாதர், சுகர் ஆகிய இரு முனிவர்கள் இசையுடன் சாமவேதத்தை வீணையில் வாசித்துத் தங்களுக்கு அருள் பாலிக்க வேண்டும் என்று இறைவனிடம் வேண்டினர்.

## ஐந்து முக சிவன் !

⌘ சிவபெருமானின் சதாசிவ மூர்த்திக்கு சத்தியோகாத முகத்தினால் சிருஷ்டியையும், வாமதேவ முகத்தினால் ஸ்திதியையும், அகோர முகத்தினால் தியேபவச் செயலையும், ஈசான முகத்தினால் அனுகிரகத்தையும் செய்கிறார் என ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது.


இந்த ஐந்து செயல்களையும் குறிக்கும் ஐந்து முகங்களையும் பஞ்சமுக வாத்தியத்தில் பொருத்திக் கூறுகிறார்கள்.

## ஆடியவள் கொடுத்த ஆடுகள்

⌘ திருவாரூர் திருக்கோயிலில் பணிபுரிந்த நடனமாடும் பெண்மணி ஒருத்தி திருமறைக்காட்டு ஈசனுக்கு நந்தா விளக்களித்து அதற்கென தொண்ணூறு ஆடுகளையும் தானமாக கொடுத்து பட்டயம் எழுதி வைத்தாள்.

இறைவனே ஆடலரசன் அவனே பிறர் ஆடுவதைக் கண்டு ரசித்தான் என்றால் வியப்பாக இல்லை. ஆரூர் பகுதியில்தான் இந்த நிகழ்ச்சி நடந்தது.





# லிங்க தரிசனமே - புகழ் ஓங்கும் தரிசனம்

எம்பெருமான் சிவனை உருவ வழிபாடு செய்வதைவிட, லிங்க வழிபாடு செய்வதே சிறந்தது என்று வியாசர் மகாபாரதத்தில் கூறி இருக்கிறார். லிங்கம் என்னும் சொல்லுக்கு "எல்லாம் தோன்றி மறையும் மூலம்" எனவும் மங்கலத்தைத் தரும் பரம்பொருள் எனவும், அண்டசராசரங்கள் யாவும் ஒடுங்குவதும், மீண்டும் உற்பத்தியாகி வெளிப்படும் தன்மை கொண்டது என்றும் சிவாகமங்கள் விளக்குகின்றன. ஆலயங்களில் ஸ்தாபித்த லிங்கம் அசலம், இல்லங்களில் வைத்து பூஜிக்கும் லிங்கம் சலம், ஈசன் தன் கருணை பெருக்கால் தோன்றியது சுயம்புலிங்கம்.

கிழக்கில் தத்புருஷம், மேற்கில் சத்யோசாதம், மந்தகத்தில் ஈசானம், தெற்கே அகோரம் வடக்கே வாமதேவம் என்பது ஐந்துமுக லிங்கவிவரம், ஆட்யலிங்கம் என்பது சிரம் பிறைச்சந்திர வடிவமாக உள்ளது. அநாட்ய லிங்கம் என்பது சிரம் வெள்ளரிப்பழ வடிவம் கொண்டது. சர்வ சமலிங்கமானது குடை போன்ற சிரத்தையுடையது. சுரேட்யலிங்கம் எனப்படுவது உச்சியில் கோழி முட்டை வடிவம் கொண்டது என நான்கு லிங்க வடிவங்கள் சரசிவாக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# ருத்திராட்சம் எப்படி தோன்றியது ?

ருத்திராட்சம் என்ற பெயரே ருத்திரன் என்ற பெயரில் இருந்து வந்ததாகும். சிவபெருமானின் மூன்று கண்களில் இருந்து விழுந்த ஆனந்தக் கண்ணீரில் இருந்து முப்பத்தெட்டு விதமான ருத்திராட்சம் தோன்றியது. வலது கண்ணில் இருந்து மஞ்சள் நிறத்துடன் பன்னிரண்டு விதமான ருத்திராட்சமும், இடது கண்ணில் இருந்து வெண்ணிறத்தோடு பதினாறு விதமான ருத்திராட்சமும், நெற்றிக் கண்ணில் இருந்து பத்துவிதமான கருப்பு நிற ருத்திராட்சமும் தோன்றியது என்பர்.

தியாக வினோதானம் வீதி விடங்காப் பெருமானின் திருமேனியை விழாக்காலங்களில் தேவாசிரிய மண்டபத்தில் அலங்காரத்துடன் அமரச் செய்து, அத்திருமேனி முன்பு தலைசிறந்த ஆடல் அணங்குகளை ஆடச் செய்து மன்னனும் மக்களும் போற்றினார்கள்.

பகவான் பரமேஸ்வரனுடைய மூர்த்திகள் 25 என ஆகமங்கள் கூறுகிறது. 25 மூர்த்திகளின் தலைகளும் 50 கைகளுடனும் உள்ள போக அதிகாரமடங்கிய மூர்த்தியே ஸ்ரீ மகா சதாசிவர் ஆவார். இந்த விக்ரகம் புதுக்கோட்டையிலுள்ள ஸ்ரீபுவனேஸ்வரி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கிறது.

கேரளாவில் கோழிக் கோட்டிலிருந்து 4 மைல் தொலைவில் உள்ள திருவன்னூரில் பரசுராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பரசுலிங்கம் உள்ளது. இங்கு வேடன் உருவில் கடவுள் இருக்கிறார்.

■ சிவ ஷேத்திரங்களில் ஜோதிர் லிங்கங்களாக அருள் வழங்கும் தலங்கள் பன்னிரெண்டும் தென்னிந்தி யாவிலேயே அமைந்துள்ளன. பஞ்சபூத க்ஷேத்திரங்கள் ஐந்து. சப்தவிபங்கள் ஸ்தலம் ஏழு ஸ்தலங்களாகும். அஷ்ட விரட்ட திருப்பதிகள் எட்டு. இந்தஸ்தலங்களில் ஈஸ்வரரைதரிசிப்பது சிறப்பாகும்.

■ மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் நாள் தோறும் சிவாலய வழிபாடு செய்ய வேண்டும். அதுவே பிறவிப் பெருங்கடலை நீந்த வழியாகும்.

## தீண்டாத திருமேனியன்

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரத்திலிருந்து கிழக்கே ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள மாடம்பாக்கம் என்ற ஊரில் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் ஆலயம் அமை- ந்துள்ளது. இவ்வாலயத்தின் இறைவனான சுயம்பு லிங்கம் "தீண்டாத திருமேனியன்" என்று அழைக் கப்படுகிறார். பெயருக்கு ஏற்றவாறு இந்த லிங்க வடிவைத் தொட்டு குருக்கள் பூஜை செய்வது கிடையாது. கண்ணை மூடிக்கொண்டு சந்தனத்தை லிங்கத்தின் நெற்றியில் போடுவார்களாம். வஸ்திரத்தையும் அப்படியே தள்ளி நின்று சாத்துவார்களாம்.




## மாறி நிற்கும் அர்த்த நாரீஸ்வரர்

வழக்கமாக அர்த்தநாரீஸ்வரரின் இடது புறம் பெண்பாகமாகவும் வலது புறம் ஆண்பாகமாகவும் அமைந்து இருக்கும்.

ஆனால் கரந்தை வெங்கடேஸ்வரர் கோயிலில் வலதுபுறம் பெண்பாகமாகவும் இடதுபுறம் ஆண்பாகமாகவும் மாறி நிற்கிறார். இந்தச் சிலை கரிகாலன் காலத்தைச் சேர்ந்தது.


# கல் ஆலமரம் உள்ள சிவன் கோயில்

செங்கற்பட்டு மாவட்டத்தில் செய்யூர் என்ற ஊரில் மிகவும் பழமை வாய்ந்த கோவில் ஒன்று உள்ளது. இக்கோயில் சோழ மன்னன் ஒருவனால் கட்டப்பட்டது. இது கைலாசநாதர் கோயில் என அழைக்கப்படுகிறது. இதன் முகப்பு வாயிலின் கூரையில் வளர்ந்துள்ள கல் ஆலமரம் சுமார் 40 அடிவரை வளர்ந்துள்ளது.



# குடம் விழுந்த இடம்

பிரளயத்தின்போது தெற்கு நோக்கி மிதந்து வந்த குடத்தை சிவபெருமான் அம்பினால் வீழ்த்தினார். குடம் உடைந்த சிருஷ்டி பீஜங்கள் பல இடங்களில் தெறித்தன. உடைந்த குடத்தின் அடிப்பகுதியையும் மண்ணையும் பிசைந்து அதில் இறைவன் இணைந்தார். அவரே கும்பேஸ்வரர் ஆவார். குடம் வீழ்ந்த இடம் கும்பகோணம். குடத்தின் வாய் இருந்த இடம் குடவாசல்.



## சிவத்தலமும் சிறப்புச் செய்திகளும் :

வைத்தீஸ்வரன் கோவில் : உடல் நோய் நீங்க பக்தர்கள் வேண்டிக் கொள்ளும் தலம் இது. இங்கு அங்காரனுக்கு பெருமை. தந்தையின் பெயரால் அமைந்த கோவிலானாலும் தனயன் செல்வமுத்து குமாரசாமியிடம் தரிசனத்திற்கு வருவோர் ஏராளம்.

திருநாகேஸ்வரம் : ராகுபகவான் சிவ பெருமானை பூஜித்த திருத் தலமாகும். இங்கு மட்டுமே ராகு தமது இரு மனைவிகளுடன் காட்சி தருகிறார். இங்கு ராகு பகவானுக்கு பாலாபிஷேகம் செய்யும் போது பால் நீலநிறமாக மாறுவது சிறப்பு ராகு, கால பூஜை சிறப்பானது.

திருக்கடவூர் : மார்க்கண்டேயர் உயிரை பறிக்க வந்த எமனை உதைத்துத் தள்ளி சிவ பெருமான் தனது பக்தரை காத்த தலம்.

## கடவுளை மீறிய நம்பிக்கை

பதினைந்து வருடமாக விளையாத தரிசு நிலத்தை பெரியவர் ஒருவர் கஷ்டப்பட்டு உழுதார். உழுது முடிக்கும் தருவாயில் உலகை சுற்றி வந்த சிவனும், பார்வதியும் அங்கு வந்து சேர்ந்தனர். சிவனுக்கு ஆச்சரியம்!

“பெரியவரே இந்த வயதான காலத்தில் பல வருடங்களாக விளையாத நிலத்தை வீணாக ஏன் உழுகிறீர்” என்று சிவன் கேட்டார்.

“எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த வருடம் மழை பெய்து அமோக விளைச்சல் காணுமென என் உள்மனம் சொல்கிறது. எனவேதான், முன்கூட்டியே உழுது வைக்கிறேன்.” என்று பதில் கூறினார் பெரியவர்.

சிவனுக்கு ஆச்சரியத்துடன் கோபமும் வந்தது. “இவ்வுலகை ஆளும் சிவனாகிய நானே கூறுகிறேன் நிலம் விளையாது என்று. நீர் எங்ஙனம் அத்தனை நம்பிக்கையுடன் கூறுகிறீர்”

“கடவுளையும் மீறிய நம்பிக்கை எனக்கிருக்கிறது. என் நம்பிக்கை



பொய்ப்பதில்லை. என் நேரம் நன்றாக இருப்பின் கண்டிப்பாக மழை பெய்யும்".

சிவன் கோபமாக பெரியவரை முறைத்தார். பின் வேகமாக கைலாசம் சென்று மேகங்களை எல்லாம் அழைத்தார். மேகங்கள் வணங்கி நின்றன,

"நீங்கள் எத்திசை மழை பெய்யினும் தென்திசை மட்டும் பெய்யாதீர்கள்" என கட்டளையிட்டார். மேகங்கள் தலைவணங்கி ஏற்றுக் கொண்டன.

மேகங்களில் குருட்டு மேகம் என்றொரு மேகம் உண்டு. அது எப்பொழுதுமே எதிர்திசையாகவே சிந்திக்க கூடியது. தன் குருட்டு புத்தியால் தென்திசையில் மழையைப் பெய்தது.

ஆறு மாதங்கள் கழித்து சிவனும் பார்வதியும் மறுபடி உலகை வலம் வந்தபொழுது பெரியவரின் வயல் நன்கு செழிப்புற்று வளர்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டார் சிவன்.

பெரியவரை அழைத்து விளக்கம் கேட்டார். பெரியவர், சிவனை வணங்கி, "எல்லாம் என்னுடைய நம்பிக்கைதான் காரணம். என் நம்பிக்கை பொய்க்கவில்லை" என்றார்,

சிவன் ஆத்திரமுற்று மேகங்களை எல்லாம் அழைத்தார். "யார் என்னுடைய கட்டளையை மீறி தென்திசை சென்று மழை பெய்தது?"

"என்னை மன்னித்து விடுங்கள் பிரபு. தாங்கள் தென்திசை சென்று மழை பெய்ய வேண்டாம் என கூறியதால் ஏன்? எதற்காக? என்று சிந்தித்துக் கொண்டே சென்றதால் தென்திசையை வடதிசை என நினைத்து மழை பெய்து விட்டேன்" என்றது குருட்டு மேகம்.

தன்னையும் மீறிய பெரியவரின் நம்பிக்கையை பாராட்டி விட்டு சிவன் கைலாசம் சென்றார்,

# பெரிய சிவத்தலம் !

அன்னமனைநடா கிராமத்தில் சுயம்பு லிங்கம் பெரிய சிவத்தலம். இத்தலத்தின் உட்பிரகாரத்தில் வலம்புரி விநாயகர் மேற்கே இரண்டடி உயர பஞ்சலோக பார்வதி, வடக்கே வடக்கன் தேவர் என்ற மாகவிஷ்ணு ஆலயம் ஆகியன உள்ளன. வட்டவடிவ பலிபீடம் தரையோடு தரையாக அமிழ்ந்து இருக்கிறது.



எந்த சிவன் கோவிலிலும் கன்னிமூலையில் விநாயகரும் மேற்கில் சுப்ரமணியரும் வடக்கில் சண்டிகேசரரும், தெற்கில் தட்சணாமூர்த்தியும், அக்னிமூலையில் சோமாஸ்கந்தரும் ஈசாதனத்தில் நடராஜரும் பைரவரும் இருப்பார்கள்.

ஒரு சமயம் திருநாவுக்கரசர் சிவனை வணங்கச் சென்ற போது ராமேஸ்வரம் முழுவதும் சிவலிங்கங்களாகவே தெரிந்ததாம். ஆகவே தன் பாதங்கள் தரையில் சிவலிங்கங்கள் மீது படக்கூடாது என்பதற்காக பாம்பனிலிருந்தே பதிகம் பாடி வணங்கினாராம்.

நன்னிலம் மலை ஈஸ்வரன் கோவில் லிங்கத்தை பசுவின் குளம்பு மிதிக்க சுவாமிக்கு மேலே இருக்கும் விதானத்தின் தேன் கூட்டிலிருந்து தினசரி தேன் லிங்கத்தின் மீது விழுகிறது. இங்கு இறைவனுக்கு வேறு எந்த அபிசேகமும் கிடையாது. இதைப் பார்க்க வந்த விநாயகர் ஆனந்த பரவசத்தில் கூத்தாடும் நிலையில் தெற்கு பார்த்து நின்று விட்டார். பிள்ளையாரின் பின்புறத்தில் உள்ள ஒரு துவாரத்தின் வழியாகப் பார்த்தால் அம்மனை தரிசிக்கலாம். அத்துடன் லிங்கத்தின் மீது தேன் சொட்டுவதையும் காணலாம்.

# எழில்மிகு இஞ்சிமேடு சிவனாலயம்



இயற்கை எழிலோடு விளங்கும் இஞ்சிமேடு கிராமம், திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசிக்கு அருகில் உள்ளது.

இஞ்சிமேட்டிலுள்ள பெரிய குன்றின் மீது சதாசிவனாகவும், வைத்தீஸ்வரனாகவும் இரு சிவலிங்கத் தோற்றங்களாக இம் மலை மீது எம்பெருமான் அருள் பாலித்து வருகிறார்.

இம்மலை மீது மாமுனிவர்கள் மூலிகைகளாலான அந்தர லிங்ககங்களை அமைத்து பூஜித்து வந்தனர்.

இஞ்சிமேடு பெரிய மலைக்கும் கிழக்கே மிகவும் புகழ் பெற்ற பெரிய உடையார் குளத்தில் பன்னெடுங் காலமாக மாமுனிவர் ஒருவர் எம்பெருமானை நோக்கிக் கடுந்தவம் இருந்து வந்தார்.

இம்முனிவரின் தவவலிமையை சோதிக்க நினைத்த சோதி சொரூபன், குளத்து நீரில் ஒற்றைக் காலில் நின்று தவமியற்றிய அம்முனிவரின் தவத்தைக் கலைக்கும்படி பூதகணத்தை ஏவினார்.

அப்பூதகனம் யானை வடிவில் அங்கு வந்து குளத்து நீரை உறிஞ்சி பீய்ச்சுவதும், மதம் பிடித்தது போல பிளிறி நீரை ஓங்கி துதிக்கையால் அடிப்பதும், மண்ணை வாரி இறைப்பதும் தாமரை மலர்களைத் தண்டுடன் பிடுங்கி எறிந்து அட்டகாசம் செய்தும் கூட முனிவரின் தவம் கலையவில்லை.

யானையானது குளத்தில் இறங்கி முனிவரின் தவத்தைக் கலைக்க நெருங்கிய போது ஒரு தீப வட்டம் முனிவரை சூழ்ந்தது. யானையால் எதுவும் செய்ய முடியவில்லை.

எனவே, முனிவரின் தவ வலிமையை அறிந்த சிவனார், முனிவர்முன் தோன்றி "யாது வரம் வேண்டும்?" என்று கேட்க, "எம் பெருமானே! உம்மை எப்பொழுதும் லிங்க வடிவில் வணங்கும் பேரருளை வழங்க வேண்டும்!" என்று கேட்க, "இதோ நம்கண் முன்னால் தோன்றும் இந்த பெரிய மலைமீது சிவ லிங்கங்களை அமைத்து வழி படுவாயாக!" என்று அருளினார்.

இத்தகைய தவவலிமை கை வரப்பெற்ற மாமுனிவர் நிறுவிய சிவலிங்கமே இம்மலை மீது இரண்டு பெரிய ஏரிகளுக்கும், வயல் வெளிகளுக்கும் நடுவில் இயற்கை யோடு எழில் கொஞ்சும் புனித திருக்கோவிலாக இருந்து வந்தது.

இமயமலைக்கு நிகராக இப்பெரிய மலை விளங்கிய போது தேவ தேவனான எம்பெருமானுக்கும், பார்வதிக்கும் இமயமலையில் நடந்த திருமண வைபவத்தைக் காணத் தேவர்களும், முனிவர்களும் இமயமலைக்குச் சென்ற போது மலை அடித்தாழ்ந்தது, இதை சமண் செய்ய தவ வலிமை மிக்கவரும் மிகச் சிறந்தவருமான அகத்திய மாமுனிவரை தென்திசை சென்று சமம்படுத்துமாறு கயிலை நாதர் பணித்தார். சிவானரின் ஆணைப்படி அகத்திய மாமுனிவர் தென்திசைக்கு வந்த போது இமயமலையை ஒத்த இப்பெரிய மலையைக் கண்டார். பின்பு பரமனை நினைத்தார்.

அகிலமெங்கும் பேரருள் பொழியும் மூலவரின் திருவுருவத்தை மலை மீது கண்டு சிவனாரைத் தரிசிக்க மலை மீது நின்றார்.


என்ன வியப்பு! மாமுனிவரின் தவவலிமையால் இஞ்சிமேடு பெரியமலை பூமியில் அழுந்திட சரிந்த வடபுலம் சமமானது கண்டார்.

அங்கிருந்த படியே ஞானப் பார்வையுடன் நோக்கியபோது, சோமநாதர் ஆனந்தப் புன்னகையுடன் இமயத்தில் தோன்றினார்.

அகத்திய மாமுனிவர் மீண்டும் கண்களை மூடித் திறந்தபோது மற்றொரு அழகிய சிவலிங்கமும் பெரிய மலை மீது இருப்பதைக் கண்டார். அவ்வளவில் இமயமலை போன்ற இப்பெரிய மலையே, சதா சிவன் சதா தியானத்தில் இருக்கும் இடமாக இருக்கக் கண்டார், வணங்கினார்.

இது ஒரு பூலோகக் கைலாயம். நத்திக்கு வரம் கொடுத்து வாகனமாக ஏற்றுக் கொண்டதால், நந்திர விண்ணகரம் என்ற பெயரே, மிஞ்சி என்ற ஒரு வகைத் தர்பைப் புல்லும் கதலி எனும் ஒரு வகை வாழை இனமும் சூழ்ந்த யாக

சாலைகள் நிறைந்து இறைவனை வழிபடும் ஒரு புனித இடமாகத் திகழ்ந்த புனிதத் தலம்.



இத்தகு சிறப்புமிக்க பெரியமலை அடிவாரத்தில் முனிவர்கள் ஒரு பெரிய மடத்தை நிறுவி நடத்தி வந்தபோது அதிகார வெறியால் மடாலய தலைமை முனிவரை, அடுத்து பட்டத்துக்கு வரவிருந்த இளைய முனிவர் கொலை செய்த போது இறைவன் சன்னதி முன்பு நடந்த இச்செயலை இறைவன் தடுக்கவில்லையே என்ற வேதனையில் அம்மாமுனிவர் "கோவில் அழியத் தக்கது" என சாபம் கொடுத்தார்.

இதன் காரணமாக சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு அன்னியர்கள் போர் தொடுத்த போது சிவலிங்கத்தை மட்டும் விட்டுவிட்டு அனைவரையும் சூறையாடி சென்றனர். நகரத்தை அழித்ததோடு அந்தணர்கள் கொலை செய்யப்பட்டனர். மன்னன் இறந்தான். பயத்தால் மக்கள் வேறு இடம் தேடிச் சென்றனர். பூஜைகள் நின்று போயின.

இந்த நிலையில் தான் "நெய்தீப முனிவர்" ஸ்ரீலஸ்ரீ இராஜா சுவாமிகளாக அவதாரம் செய்த சிற்றரசர் இஞ்சிமேடு கிராமத்தில் 80 ஆண்டுகள் தீபநெய் ஏற்றி இறைவனை வணங்கி வந்தவர் பெரிய மலை அடிவாரம் வந்து தன்னை ஆட்கொள்ளுமாறு வேண்ட, அப்போது அங்கு ஒரு முனிவர் இருப்பதை அறிந்து அவர் காலில் விழுந்து வணங்கினார். இம்மலையில் கோவில் கட்டவேண்டும் தன்னால் முடியாவிட்டாலும் தனது பிள்ளைகள் கட்டவேண்டும் என இறைவனிடம் வேண்டியது குறித்து முனிவரிடம் கூறினார். இதனால் மகிழ்ந்த முனிவர் இந்த சிவலிங்கத்தை மூன்று முறை வலம் வந்து வணங்கு உன் எண்ணம் நிறைவேறும் என்றார். அப்படியே வலம் வந்து வணங்கி விட்டு முனிவரை தேடியபோது அவரைக் காணவில்லை. இதனால் முனிவர் வடிவில் வந்தது ஈசனே என அறிந்து கொண்டார்.

## சிவாலயம் செல்வோம்

- குளிர்ந்த நீரில் குளித்து, தூய ஆடை அணிந்து சமயச் சின்னங் களான திருநீறு, உத்திராட்சம் அணிந்து செல்ல வேண்டும்.

- மலர்கள், தேங்காய், பழம், சூடம், சாம்பிராணி, மணங்கமழ் வத்தி, தீபம் ஏற்ற எண்ணெய், நெய் இவைகள் எவையேனும் கொண்டு போக வேண்டும்.

- கோபுர வாயிலுள் செல்லும் முன் கைகால்களைக் கழுவிய பின் தலைமேல் இரு கைகளையும் கூப்பி கோபுரத்தை வணங்கி உள்ளே செல்லல் வேண்டும்.


- ஐந்தெழுத்தை மனதில் ஓத வேண்டும்.

- முதலில் கொடி மரத்தின் பக்கமாக பூமியில் விழுந்து வணங்க வேண்டும்.

- தலை விநாயகரை தரிசிக்க வேண்டும். தலையில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டும்.

- கொடிமரம், பலிபீடம், நந்தி இவைகளை வணங்கிய பின் துவார பாலகரின் ஆசிபெற்று இறைவன் சந்நிதி அடைய வேண்டும்.

- மூலமூர்த்தியை வணங்கி பின் சந்திரசேகர், நடராஜர், சிவகாமி அன்னை, சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ மூர்த்திகளை வணங்க வேண்டும். பிறகு பிரகாரத்தில் உள்ள சண்டேஸ்வரர், நாயன்மார், தெட்சணாமூர்த்தி, முருகன், நவக்கிரகம் முதலியோரை வழிபட வேண்டும்.



- அம்பிகை சன்னதியையடைந்த தேவியை வழிபட வேண்டும்.

- இறைவன் தேவி இவர்களின் கோவில்களை

குறைந்தது மூன்று முறையாவது வலம் வர வேண்டும்.

ஒவ்வொரு சந்நிதியிலும் அந்தந்த தெய்வத்திற்குரிய தோத்திரப் பாடல்களை வழிபடும் மற்றவர்களின் அமைதிக்கு இடையூறு இல்லாமல் பாட வேண்டும். மற்ற நேரத்தில் ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டே இருக்க வேண்டும். அல்லது திருவாசகத்தில் உள்ள சிபபுராணத்தை ஓதிக் கொண்டும் வரலாம்.

கடைசியாக கொடி மரத்துக்கு அருகில் வந்து நிலத்தில் விழுந்து வணங்கி இறைவனிடம் விடைபெற வேண்டும். வணங்கியபின், சற்று தூரத்தில் அமர்ந்து ஐந்தெழுத்தை நூற்று எட்டு முறை குறையாமல் ஓதியபின் கோவிலை விட்டு அகல வேண்டும்.

## உயரமான லிங்கம்

சிவனின் பாதம் பணிவதால் தினமும் மக்களை வருத்தும் காமம், கோபம் போன்ற மனநோய் நீங்கும் பக்தி தெளிவு உண்டாகும். அதன் பயனாக பாவங்கள் செய்யாமல் இருக்கலாம் தூய பக்தி தலை எடுக்கும்.


திருச்சிக்கு வடமேற்காக சுமார் 15 கி.மீ. தூரத்தில் காவிரியாற்றின் வடக்கில் உள்ள பைஞ்ஞிலி என்னும் ஊரில் நீல கண்டர் சன்னிதியின் தென் பகுதியில் நான்காம் பிரகாரத்தில் பூமிக்கடியில் யமனுக்கு சன்னதி உள்ளது. சிவனுக்கு பயந்து யமன் பாதாளத்தில் மறைந்திருந்த இடத்தில் கோவில் அமைந்துள்ளது. பக்கத்தில் உள்ள யமதீர்த்தத்தில் மூழ்கி எழுபவர்க்கு எமவேதனை இல்லை.

வட நாட்டில் விஜயபுரி என்னும் ஊரிலுள்ள சுடுகாட்டில் ஏராளமான பாணலிங்கம் எனும் வகையைச் சார்ந்த லிங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மும்பை வழியில் நாசிக் கிலிருந்து 18-மைல் தூரத்திலுள்ளது திரியம்பகம். இங்குள்ள பிரம்மகிரி மலையிலிருந்து கோதாவரி, அகல்யா, வைதர்ணா ஆகிய நதிகள் தோன்றி பாய்கின்றன. ஷேத்ர மூலவரான திரியம்பக நாதர் ஆவுடையார் இல்லாமல் மிக உயரமான லிங்கமாக விளங்குகிறார்.



# நலம் தரும் நல்லூர்



இறைவன் தமது திருவடிகளைத் திருநாவுக்கரசரின் தலையில் வைத்து பெருங்கருணை புரிந்த இடம் திருநல்லூர்.

பொதுவாக பெருமாள் கோவில்களில் மட்டுமே 'பாத சேவை' என்ற பெயரில் இறைவனின் திருவடி பொறித்த மகுடத்தை (சடாரியைப்) பக்தர்களின் தலையில் பொறித்து வாழ்த்தி சிறப்பித்து வழக்கம்.

தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்களில் திருநல்லூரில் மட்டுமே இந்த வழக்கம் கையாளப்படுகிறது. இறைவன் அப்பருக்குத் திருவடி சூட்டியதன் நினைவாக இங்கு வரும் அன்பர்களுக்கு இந்தக் கோவில் சிவாச்சாரியார்கள், இறைவனின் திருவடி பொறித்த மகுடத்தை, திருவடி சூட்டும் சேவையாக ஆன்மீக அன்பர்களின் தலையில் வைத்து வாழ்த்துகிறார்கள்.

இத்தலம் தஞ்சை மாவட்டம், பாபநாசத்தையடுத்த சுந்தரபெருமாள் கோவிலிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் வலங்கைமான் செல்லும் பாதையில் உள்ளது.

இங்குள்ள மூன்றாம் ராஜராஜ சோழனின் கல்வெட்டிலிருந்து, "பெண்களும் கல்வி பயின்றார்கள்; திருமணமான பெண்களும் இல்லறத்தைக் கவனித்துக் கொண்டே கல்வியிலும் ஈடுபட்டிருந்தார்கள்" என்ற செய்தி தெரிய வருகிறது.

"தத்துனுடையார் ஈசானதேவர்" என்பவர் திருவிடை மருதூரைச் சேர்ந்த மாளிகை முதலியாரின் ஆசிரியராவார். அவர் நல்லூரில் தங்கி மாணவர், மாணவியர் பலருக்கும் கல்வி கற்பித்து வந்தார். அவரது மாணவி ஒருத்தி தன் கணவன் சொன்னபடி ஆசிரியருக்கு ஒரு மடமும், பின்னர் அதன் வருவாய்க்கு மான்யமாக நிலமும் அளித்தாள்.

## வட்ட லிங்கம்

திருக்கோயிலூரிலிருந்து ஆசனூர் செல்லும் பாதையில் 12 கி.மீ. தொலைவில் இளவரசன் கோட்டை என்ற ஊர் உள்ளது.

ஏராளமான கல்வெட்டுக்கள் நிறைந்த இங்குள்ள திருக்கோயிலில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புக்களையும் புராணப் பெருமைகளையும் காணலாம். ஐந்து பிரகாரங்களுடன் திருக்கோயில் அகன்ற பரப்பில் அமைந்துள்ளது.

கருவறையில் மூலவர் அர்த்த நாரீஸ்வரர் லிங்க வடிவில் காட்சியளிக்கிறார். மூலலிங்கத்தின் அடிப்பகுதி வட்டமாக இல்லாமல் சதுரமாக உள்ளது.

## சிவனும் சுடு நீரும் !

திருவண்ணாமலைக் கோவிலின் அடிவாரத்தில் இருக்கும் விநாயகரின் திருவுருவமே தமிழ் நாட்டிலிருக்கம் விநாயகர் உருவங்களுள் மிகப் பெரியது.

ஓ

அருணகிரி நாதருக்கு திருவண்ணாமலை கோவிலில் தனி சன்னிதி உள்ளது.

ஓ

திருவண்ணாமலையில், ஆஸ்திரேலியாவில் இருந்து வந்து தங்கியிருந்தவர் நரிக்குட்டி சாமியார்.

ஓ

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் ஏற்றிய பிறகு தீபதரிசனம் செய்த பின் கிரி (மலை) வலம் வரலாம். தீபம் ஏற்றுகிற போதும் ஏற்றுவதற்கு முன்னும் "மலை வலம்" செய்யக் கூடாது.

ஓ

நந்திதேவர், மனித உருவில் கோயில் கொண்டுள்ள இடம் அம்பர் மாகாளர் என்கிற சிவாலயம்.

ஓ

சிவாகமத்தில் முறைப்படி தீட்சை பெற்றவரே சிவன் கோயிலில் பூஜை செய்யலாம்.

ஓ

சிவபெருமானுக்கு சுடுநீரில் திருமுழுக்கு செய்விக்கிற ஒரே திருக்கோயில் திருமுல்லைவாயில்.



## தேவி வழிபட்ட ...

மலைமகள் மானுருக் கொண்டு சிவபெருமானை வழிபட்ட இடம் மாந்துறை.

❖

அசிக்காடு என்னும் இடத்தில் பார்வதி தேவி பசுவாக மாறி சிவபெருமானை வழிபட்டுள்ளார்.

❖

பிரதோசகாலம் என்பது மாலை மணி 4.30 மணி முதல் 7.00 மணி வரை. இதனை மஞ்சள் வெயில் மாலைப் பொழுது என்பர். சிவபிரான் ஆலகால நஞ்சினை அருந்திய நேரமே இந்தப் பிரதோச காலம்.

❖

குடந்தை அருகிலுள்ள திருந்து தேவன் குடி திருத்தலத்தில் நண்டும், குதிரையும் சிவனை வழிபட்டு முக்தி பெற்றனவாம்.

❖

சிவபெருமானுக்கு அகில், சந்தனம், பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, ஜவ்வாது, புனுகு ஆகியவற்றைக் கொண்டு அபிஷேகம் செய்வது சிறப்பானது.

## பாதி சிவன் ....

பிள்ளையார்பட்டி, திருமெய்யம், குன்றக்குடி ஆகிய இடங்களில் உள்ள குடவரைக் கோவில்களில் சிவ பெருமான் இடுப்பு வரை செதுக்கப்பட்டுள்ளார். அதற்குக் கீழ் தூண் அமைந்துள்ளது.

## கொடிமர தத்துவம் !

சிவாலயத்தின் உள்ளே நுழைந்ததும் முதலில் தெரிவது கொடி மரம்தான். இதுதான் சிவனின் திரு உருவச் சின்னமாகும். மரத்தின் கொடி ஆன்மாவின் அடையாளமாகும். மரத்தின் கொடி மரத்தைச் சுற்றி இருக்கும் தர்பை கயிறுதான் பாசத்தைக் குறிப்பதாகும்.

## சிவ பக்தன் ...

சிவ பக்தியின் காரணமாக தன்தந்தையின் காலை வெட்டியவர் சண்டேஸ்வரர்தான். இன்றும் கையில் கோடாரியுடன் இருக்கிறாரே அதைப் பார்த்தாலே அறியலாமே !

## பிரான் மலை ....



பிரான்மலை உமாமகேஸ்வரர் திருக்கோவில்தான் பூமி, அந்தரம், சொர்க்கம் என்று மூன்று பகுதிகளுடன் சிறப்பாக அமைந்துள்ளது. வேறு எந்த கோவிலிலும் இது போன்ற அமைப்பு இல்லை.

## சிவனின் பரிசு ...

சிவ பக்தராக இருந்த விசாரசருமர் என்ற அந்தணர், தீவிர சிவபக்திகாரணமாக சிவனின் அருளைப் பெற்று தெய்வாம்சம் பெற்றார். இவர்தான் சண்டேஸ்வரர் ஆவார். இவருடைய திருவுருவம் சிவாலயங்களில் இருக்கும். பக்தி நெறியோடு வழிபாட்டுக்கு சிவனிடம் கிடைத்த பரிசு.

## காமதகனபுரம்

திருக்குறுக்கை வீரட்டம் : இது சிவன், காமனை தகனம் செய்த வீரச்செயல் நடந்த இடம். எனவே, காமதகனபுரம் என்றும் இத்தலத்தை அழைப்பர்.

மன்மதனை உயிர்ப்பித்துத் தாயாகிய லட்சுமிக்கு எற்பட்ட நடுக்கத்தைத் தீர்த்ததனால் கம்பஹரபுரம் - நடுக்கத்தைத் தீர்த்த ஊர் என்று தலத்துக்கு மற்றொரு பெயரும் வழக்கில் உள்ளது.

## நாமம்போட்ட சிவன் !

குஜராத் மாநிலம் மேஷ்நா மாவட்டம் சுலோல் பகுதியில் வட கலை நாமம் போட்ட சிவபெருமானை ஹரிசிவா என்ற பெயரில் கோவில் கட்டி வழிபாடு செய்கின்றனர்.

## எங்கும் சிவனே !

மெஸபடோனியா நாட்டில் கங்கையைத் தலையில் தாங்கும் சிவபெருமானுடைய சிலைகள் கிடைத்துள்ளன.

✡

ஆஸ்திரேலியாவில் பழங்குடி மக்கள் இன்னும் சிவபெருமானுக்குரிய விழாவைக் கொண்டாடுகின்றனர்.

✡

சயாம், சுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளில் பல சிவ - விஷ்ணு ஆலயங்கள் உள்ளன. அங்கே இராமாயணம் புகழ் பெற்ற காவியமாக இருக்கிறது.

சிற்ப சாஸ்திர ஆகம விதிப்படி சிவலிங்கம் பின் வரும் மூன்று பகுதிகளைக் கொண்டது. அடிப் பாதம் (பிரம்மபாதம்) நடுப்பாதம் (விஷ்ணு பாதம்) மேல் பாதம் (சிவ பாதம்) இவற்றை முறையே உயிர்ப் பாதம், பெண் பாதம், ஆண் பாதம் என்று கூறுவர்.

## அஞ்சல் தலையில் சிவன் ....

இந்துக்களின் பண்டிகையில் ஒன்றான மகாசிவராத்திரியை ஒட்டி நேப்பாள நாட்டில் (1966-ஆம் வருடம்) ஒரு ஸ்டாம்பு வெளியிட்டுள்ளது. அதில் சிவபெருமான் பார்வதி தேவி மற்றும் பசுபதி கோயிலின் படம் எல்லாம் அச்சடிக்கப்பட்டிருந்தது.

# வழுக்குப் பாறை

எர்ணாகுளத்திலிருந்து திருச்சூர் செல்லும் பாதையில் திருச்சூருக்கு 11வது கிலோ மீட்டரில் உள்ளதுதான் திருக்கூர். இருபுறமும் படிக்கட்டு உள்ள குன்றின் மீதுள்ள ஆலயத்தில் கிழக்கு கோபுர வாசல் 8 கால் மண்டபம் துவஜஸ்தம்பத்துடன் கூடிய வழுக்குப் பாறை சிவலிங்கக் கோவில் உள்ளது. இங்கு தான் சிவனும் பார்வதியும் சொக்கட்டான் ஆடினார்கள். மேற்கு வாசல் வழியாகவும் செல்லலாம். வடக்கு வாயிலின் வெளிப்புறம் அதல பாதாள பள்ளம். அங்கு திருவாங்கூர் மகாராஜாவின் காலத்தில் குற்றவாளி களுக்கு மரணதண்டனை கொடுப்பதாக இருந்தால் வடக்கு வாயிலிலிருந்து பாதாளத்தில் தள்ளி விடுவார்களாம்.

கீழே விழுந்தவன் உயிருடன் இருந்தால் அவனுக்கு ராஜ வைத்தியம் பார்ப்பதுடன் அவனுக்கும் அவனது குடும்பத்தினருக்கும் நிலமான்யங்கள் வழங்குவதுடன் பரமேஸ்வரனாகவே நினைத்து திருவரங்கம் மஹாராஜா சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மன்னிப்பு கேட்பார். அந்த நாளில் வருடந் தோறும் அவரது பெயரால் அர்ச்சனை நடத்தப்படும். இப்போதும் நடை பெறுகிறது. ஒரு குகைக் கோவிலில் கிழக்கு பார்த்த சிவலிங்கம் இருக்கிறது. ஆனால் கிழக்கிலிருந்து தரிசனம் செய்ய முடியாதபடி பாறையால் மூடப்பட்டுள்ளது. நாம் தெற்குபுறம் இருந்து தான் தரிசிக்க முடியும். கணபதி, மடு ஏந்திய சிவகண பூதம், கையில் கதையுடன் ஒரு உருவம் ஆகியன உள்ளன. ஏராளமான தாம்புக்கயிறுகள் தொங்குகின்றன. ஆஸ்துமா வியாதி உள்ளவர்களின் நேர்த்திக் கடன் இது. குணமானவர்கள் கயிறை அறுத்து விட்டு துலாபாரம் கொடுக்கிறார்கள். திருக்கூர் ஆற்றங்கரையில் மேற்குப்புறம் படிக்கட்டுக்கு எதிரில் கை இல்லா பகவதி பத்ரகாளி கோவில் இருக்கிறது. எட்டுகால பூஜை சிறப்பாகச் செய்யப்படுகிறது. இந்த காளி, பாஷாணத்தால் செய்யப்பட்டது. அபிஷேக நீரை அருந்தினால் விஷ நோய்கள் பூரண குணமாகின்றன. இதன் அபிஷேக நீரில் செப்புக்குடத்தைப் போட்டு தேய்த்தால் வெள்ளிக் குடம் போல பளபளப்பாக மாறுகிறது. சிறிது சூடுபடுத்தினால் செம்பாகி விடுகிறது.



**தண்டி ....**

வெண்மணலால் சிவலிங்கம் அமைத்து அதற்குப் பாலாபிஷேகம் செய்து வணங்கி, வழிபட்டவர் தண்டி என்கிற தண்டேஷ்வரர்.

பிரதோஷம் என்பது சிவாலயங்களில் மட்டும் கடைப்பிடிக்கப்படும் மிக முக்கியமான ஒரு வழிபாடாகும்.

முதலில் நமக்கு சிவ வழிபாட்டைத் தெரியப் படுத்தியது "சுவேதாசுதா" உபநிஷத்.



## இப்படியும் சில வழிபாடுகள்

சிபபெருமானை எப்படி எல்லாம் வழிபட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே பாருங்களேன் ......

சிவனடியாரான சாத்திய நாயனார் கல்லைக் கொண்டும், மன்மதன் மலரைக் கொண்டும், பாணபத்திரர் இசை மூலமாகவும், கண்ணப்பர் ஊனைக் கொண்டும், மணிவாசகர் கண்ணீராலும், நாவரசர் கொஞ்சு தமிழாலும் சம்பந்தர் கெஞ்சு தமிழாலும், அப்பர் மிஞ்சு தமிழாலும் வழி பட்டிருக்கிறார்கள்.

## மிகப்பழமையான சிலை

ஆந்திராவில் திருப்பதிக்கும், காளஹஸ்த்திக்கும் நடுவே உள்ள குட்டிமல்லல் என்ற சின்ன கிராமத்தில் காலத்தால் மிகப் பழமையான சிவ பெருமானின் திருவுருவச் சிலை உள்ளது.

இதுவரை நமக்குக் கிடைத்துள்ள கல்லிலே செதுக்கிய சிற்பங்களுள் இந்தச் சிலைதான் காலத்தால் மிகப்பழமையானது. இது மௌரியர் காலத்தில் (கி.மு. 200இல் வடிக்கப்பட்டது).

# இங்கே சிவன் இப்படி இப்படி...

❁ எல்லா சிவன் கோவில்களிலும் வடகிழக்குப் பகுதியில் நின்ற கோலத்தில் இருப்பார். இரவில் நித்ய பூஜை முடிந்ததும் காலை பைரவர் சந்நிதியில் கோவில் சாவியை வைத்து விடுவார்கள். மறுநாள் பைரவர் சந்நிதியை அடைந்து 'சிவா பூஜா விதானார்ததம் முத்ரதண்ட பிரதேகமே' எனக்கூறி சாவியை எடுத்துச் சென்று சண்டேசரிடம் முதல்நாள் செய்திகளைக் கூறி தொடர்ந்து பணிகளைச் செய்வர்.

❁ குற்றாலத்தில் இருக்கும் குற்றால நாதர் கோவில் சங்கு வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வேறு எந்தக் கோவிலும் இந்தச் சிறப்பைப் பெற்றிருக்கவில்லை.

❁ பாண்டிகொடிமுடியார் கோவிலுக்கு ஒரு சிறப்பு இருக்கிறது. ஆவணி, பங்குனி மாதங்களில் மூன்று நாள்களுக்கு சூரிய ஒளி முறையே சிவலிங்கத்தின் மீதும், அம்பாள் மீதும் விழுகிறது. தமிழகக் கோயில்களில் குறிப்பிட்ட நாட்களில் சூரிய ஒளி சிவலிங்கம் அம்பாள் மீது விழுவது இங்கு மட்டுமே.

❁ வடஅமெரிக்காவில் கொலரடோ என்னும் இடத்திலுள்ள ஒரு குன்றின் மீது ஒரு சிவன் கோவிலும் சிவலிங்கமும் கண்டு பிடிக்கப்- பட்டுள்ளன. இவை பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுகிறார்கள்.



❁ இலங்கையிலுள்ள புராதன சிவாலயங்களுள் கீலமலைச் சிவன் கோயிலும் ஒன்றாகும். யாழ்ப்பாணத்துச் சிவன் கோலில்களில் இதுவே மிகப் பழமையானது. நகுலேஸ்வரம், திருத்தம்பலேஸ்வரம் என்னும் பெயர்களால் இது வழங்கி வருகின்றது. இதுவே யாழ்ப்பாணத்திலே தல யாத்திறைகளுக்கு மிகப் பிரசித்தமான தலமாகும்.

❁ இவ்வுலகம் பஞ்சபூதங்களால் ஆனது. நிலம், நீர், தீ, காற்று மற்றும்

ஆகாயம் என்பன ஐம்பூதங்கள். ஐம்பூதங்களைப் பற்றி தெளிவாகவும், நுட்பமாகவும் உணர்ந்த நம் பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு திருத்தலத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

நிலம் - காஞ்சிபுரம்.
நீர் - திருவானைக்கால்.

தீ - திருவண்ணாமலை.

காற்று - திருக்காளத்தி.

ஆகாயம் - சிதம்பரம்.



## சிவ பூமி ...

திருவீழி மிழலையில் ஸ்ரீ நேந்திரார்ப் பணேஸ்வர சுவாமி லிங்கத் திருமேனியின் பின்னால் "சிவன் பார்வதி" நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்கள். இக்காட்சி சிவாலய கர்ப்பக்கிரகங்களில் காண முடியாத சிறப்பாகும்.

◆

திருப்பந்துறையில் திருக்கோவில் கருவறையில் சிவலிங்கத்திற்குப் பதில் ஆவுடையார் மட்டுமே உள்ளது.

◆

சிவனடியார் வரலாறுகளை முறையாகக் கூறும் வடமொழி நூல் "அகத்திய பத்த விசாலம்" இதனை அகத்தியர் கூற எழுதப்பட்டதாம்.

◆

திருமூலர் இலங்கையை "சிவ பூமி" என்று சிறப்பித்து பாடியுள்ளார்.

◆

சிறுகுடி திருத்தலத்திலுள்ள சிவலிங்கம் ஒரு பிடி அளவே உள்ள மண்லிங்கம், அபிஷேகம் இல்லை. அம்பாளுக்குத்தான் இங்கு அபிஷேகம்.

◆

சிவாலயங்களில் தெற்கு முகமாக அமைந்துள்ள கோயில் முள்ளூர் கோயில். இது திண்டிவனம் அருகில் உள்ளது.

## வேத மந்திரம்!

'ஹர' என்ற சொல்லுக்கு பாவங்களைப் போக்குவது என்று பொருள்.

'ஹர ஓ ஹர' என்ற சொல் தமிழில் அரோகரா என வந்துள்ளது. சிவ நாமங்களில் அர என்ற சொல் உயர்ந்தது. "அரஹரா" என இடை விடாது உச்சரித்தால் நம் பாவங்கள் யாவும் ஒழிந்து விடும். அதனால்தான் அண்ணாமலையில் அரோகரா என்ற சொல் வேத மந்திரமாக ஒலிக்கிறது.

ஓ

## மாட்டுத் தலையும் மனித உடலும்

சீவலப்பேரி என்ற ஊரில் மாட்டுத் தலை, மனித உடலுடன் மாடன் கோவிலுள்ளது. பார்வதி வேண்டிக் கொண்டதால், சிவனை மதியாது வேள்வி நடத்திய தட்சனின் தலையை வீரபத்ரர் அறுத்தெறிய, உடன் சிங்கம் விழுங்கி விட்டது. பார்வதியின் வேண்டுகோளின் பேரில் வடக்கே தலைவைத்துப் படுத்திருக்கும் உயிரினத்தின் தலையை எடுத்து வந்து, கீழே விழுந்து கிடக்கும் தட்சனின் உடலில் பொருத்துமாறு சிவபெருமான் உத்திரவிட, வீரபத்திரன் ஒரு மாட்டின் தலையை எடுத்து வந்து பொருத்தினார். இதையே சுடலை மாடன் கோவில் என்றும் தக்கமாடன் கோவில் என்றும் கூறுவர்.

❀ ஜோதிர்லிங்கமும் தேவியும் இணைந்து தரிசனம் தரும் தலங்கள் காசியும், ஸ்ரீ சைலமும் ஆகும்.

## புனித லிங்கங்கம்

அத்வைதத்தை உபதேசித்துப் புகழ் பெற்ற ஆதி சங்கரர் தான் சிவ பெருமானிடம் பெற்ற ஐந்து பளிங்கு லிங்களுள் ஒன்றான முக்தி லிங்கத்தை கேதாரி நாத்தில் ஸ்ரீ சங்கரர் பிரதிஷ்டை செய்தார். தென்பகுதியில் சிதம்பரத்தில் மோட்ச லிங்கத்தை பிரதிஷ்டை செய்தார். பின் சிருங்கேரிக்கு எழுந்தருளி போக லிங்கத்தை பிரதிஷ்டை செய்தார். கடைசியாக, பஞ்ச லிங்கங்களில் எஞ்சிய யோக லிங்கத்தை தனது பீடத்தில் பூஜைக்காக வைத்துக் கொண்டார். இன்று, ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பூஜை செய்யும் சந்திர மௌலீஸ்வர ஸ்படிக லிங்கமே இந்த யோக லிங்கமாகும்.

✡

# தாழம்பூவின் தள்ளாட்டம் !

நான்முகனும், மகா விஷ்ணுவும், சிவ பெருமானின் முடியையும், அடியையும் காண முயன்றனர். மகாவிஷ்ணு பூமியில் வெகு தூரம் சென்றும் சிவ பெருமானின் அடியைக் காண முடியவில்லை. நான்முகன் சிவனின் முடியைக் காண முயன்றும் மேல் நோக்கிக் கடும் பயணம் செய்தும் சிவனின் முடியைக் காண முடியவில்லை.



மேலும் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருக்கும் போது வழியில் ஒரு தாழம்பூ வருவதைக் கண்டார். தாழம்பூவிடம், "எங்கிருந்து வருகின்றாய்?" என நான்முகன் கேட்டார், நான் சிவனின் முடியிலிருந்து வருகின்றேன் என்றது தாழம்பூ, நான்முகன் தாழம்பூவிடம் இன்னும் எவ்வளவு தூரம், சிவனின் முடியைக் காண செல்ல வேண்டும் எனக் கேட்க, தாழம்பூ, தாங்கள் எவ்வளவு தூரம் சென்றாலும் சிவனின் முடியைக் காண முடியாது என்று கூறியது. எப்படியாவது சிவனின் முடியைக் காண வேண்டும் என்றும், இல்லாவிடில் சிவனின் முடியைக் கண்டு விட்டோம் என்று சொல்ல வேண்டும் என்று எண்ணினார் நான் முகன்.

தாழம்பூவை சாட்சியாகக் கொண்டு சிவ பெருமானின் முடியைக் கண்டு வந்ததாக் கூறினார். உண்மையை அறிந்த முக்கண்ணனுக்கு ரொம்பவும் கோபம். பொய் சாட்சி சொன்ன தாழம் பூவை தான் இனி ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறி விட்டார். தாழம்பூவின் பரிதாப நிலையை எண்ணி அன்னை அபிராமி தான் அதை ஏற்றுக் கொள்வதாகக் கூறி ஏற்றுக் கொண்டாள்.

இதனால்தான் சிவாலயங்களில் இன்றும் தாழம்பூவைச் சாத்துவதில்லை. ஆனால் அன்னை சிவகாமிக்கு தாழம் பூவைச் சாத்துகின்றனர். தந்தை ஒதுக்கினாலும் தாய் அன்புடன்

# இராமர் பூஜித்த 108 சிவலிங்கங்கள்

108 சிவ லிங்கங்கள் ஒரே இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டி ருப்பதால் இத்தலம் நம்நாட்டில் சிறப்பில் முதலிடம் பெற்று விளங்குகிறது. சோழ நாட்டில் தஞ்சாவூர் மாவட்டதில் கும்பகோணத்திலிருந்து மேற்கே 15 கி.மீ. தொலைவில் உள்ள பாபநாசத்தில் குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் **108 சிவாலயம்** அமைந்துள்ளது.

## இராமர் மீது அனுமன் கொண்ட கோபம்

இலங்கையில் இராவணனை சம்ஹாரம் செய்த தோஷம் அகல இராமேஸ்வரத்தில் மூழ்கிவிட்டு ஸ்ரீ ராமபிரான், சீதா பிராட்டி, தம்பி இலக்குவணன், ஸ்ரீ அனுமன் ஆகியோர் திரும்பிக் கொண்டிருந்தனர். இராவணனின் தங்கை சூர்ப்பன கையுடன் பாதுகாவலர்களும் அரக்கர்களுமான ஹரன், தூஷன் ஆகியோரை சம்ஹாரம் செய்த தோஷம் தங்களை பின் தொடர்வதை சீதாபிராட்டிக்கும் மற்றவர்களுக்கும் உணர்த்தினார் இராமபிரான்.

தோஷம் அகல சிவலிங்கபூஜை செய்வதே உத்தமம் என்று தீர்மானித்தனர். உடனே சீதாபிராட்டி அனுமனை காசிக்குச் சென்று விரைவாக சிவலிங்கம் ஒன்று கொண்டுவர பணித்தார். காசி சென்ற அனுமான் திரும்பும் வயையில் சீதாபிராட்டி குடமுருட்டி ஆற்றில் முழுகி ஈர மணலை எடுத்து வரிசையாக சிவலிங்கங்களை செய்யலானார்.

ஸ்ரீ ராமபிரான் கரங்களாலேயே நூற்றுக்கும் மேற்பட்ட மணல் லிங்கங்களை உருவாக்கினார். ஸ்ரீ அனுமான் காசியிலிருந்து திரும்பும் முன்னரே வில்வமரத்தடியில் பக்தி பரவசமுற்று சிவலிங்க பூஜையை துவங்கிவிட்டனர். காசியிலிருந்து சிவலிங்கம் கொண்டு வந்து அனுமன் சிவலிங்கத்தை வெளி பிரகாரத்தில் வைத்துவிட்டார்.

தான் காசியிலிருந்து வருமுன்பே சிவலிங்க பூஜையை துவங்கி பூர்த்தியடையும் தருவாயில் இருப்பதைக் கண்ட ஸ்ரீ அனுமன் மூலவரான ஸ்ரீ இராமபிரான் பிரதிஷ்டை செய்த இராமலிங்கத்தை பெயர்த்தெடுததுவிட்டு தான் கொண்டு வந்த காசிலிங்கத்தை மூலவராக பிரதிஷ்டை செய்யவேண்டும் என்ற நோக்குடன் 'தான்' என்ற ஆணவத்துடன் இராமலிங்கத்தை தன் வாலால் கட்டி இழுக்கும்போது வாலறுந்து வடக்கே சென்று வீழ்ந்தார். ஒரு கணம் சினம் கொண்டதற்கு தக்க தண்டனை பெற்ற ஸ்ரீ அனுமான் இராமபிரான் பாதம் பணிந்தார்.

அனுமன் கொண்ட கோபத்திலும் நியாயம் இருப்பதை உணர்ந்த ஸ்ரீ இராமபிரான் "இவ்விடம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 107 சிவ லிங்கங்களையும வழிபட்டாலும் பின்னர் 108வது லிங்கமான அனுமந்த லிங்கததையும் வழிபட்டு பின்னர் அம்பாளை வழிபட்டாலே முழு பலன் கிட்டும், தோஷம் நீங்கப்பெறும்" என்றார். அந்நாள் முதல் மனிதப் பிறவியில் இராமபிரானின் பாவம் அகல காரணமான இத்தலம் பாபவிநாசம் என்று அழைக்கப்படும் என்று அருள்வாக்கு அருளினார்.



## ஜோதி லிங்கம் ...

கும்பகோணத்திற்கருகே அப்பருக்கு திருவடி சூட்டிய தலமான திருநல்லார் இருக்கிறது. இங்கு ஒரு பெரிய மேட்டில் அமைந்துள்ள சிவபிரான் ஆலயத்து லிங்கம் பொன் நிறமாகவும் ஒரு நாளைக்கு ஐந்து நிறமாகவும் தோன்றுகிறது.

தாராமங்கலத்தில் ஏழம்பேஸ்வரர் ஆலயம் உள்ளது. ஏழு அம்புகள் எய்யப்பட்டு அவை விழுந்த இடத்தில் இறைவன் கோவிலை அமைத்த படியால் இறைவனுக்கு அந்தத் திருப்பெயர் வந்தது.

சீர்காழியில் பிரமபுரீஸ்வரராகிய லிங்கவடிவம் பரமனுக்கு மனமாகவும், கட்டு மலையில் உள்ள தோனியப் பராகிய உமையுடன் கூடிய ஈசனே வாக்காகவும் அதற்கு தென்பால் அமைந்த சட்ட நாதராகிய சங்கமர் (அடியார்) வடிவே உடம்பாகவும் விளங்குதலைக் கண்டு வணங்கலாம்.

இந்தியாவிலுள்ள பன்னிரு ஜோதி லிங்கங்களில் ஒன்று உஜ்ஜயினியில் உள்ள மகா காளேஸ்வரர் கோயிலில் இருக்கிறது. கோயில் குளத்தில் சுமார் 9 மீட்டர் உயர திரிசூலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கோயில் நிலவறையில் பூமிக்கு கீழே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது லிங்கம்.

# அகத்தீஸ்வரர் கோயில் அங்காரக தீர்த்தம் !

தென்னாட்டின் வில்வ வனம் பகுதியில் புராண காலத்தில் வில்வலன், வாதாபி என்ற இரு அசுரர்கள் வாழ்ந்தனர். வில்வலன் அண்ணன், வாதாபி தம்பி. இருவரும் தென் சிசை நோக்கி வரும் முனிவர்கள், ரிஷிகளைக் கொன்று உண்டு களித்தனர்.

வில்வ வனம் வரும் முனிவர்களை அவர்கள் அடித்துத் துன்புறுத்தி கொல்வதில்லை. அசுரர்கள் மாய வித்தை அறிந்தவர்கள். ஆதலால் தூரத்தில் யாராவது ஒரு முனிவர் வரும் போது இவர்களும் தங்களை முனிவர்கள் மாதிரி உருமாற்றம் செய்து கொள்வார்கள்.

பின்னம் அம் முனிவர் எதிரே சென்று, "வாருங்கள் வாருங்கள்" என்று அன்போடு அழைப்பார்கள். தங்கள் குடிலுக்கு வந்து தங்கி ஓய்வெடுக்க வேண்டும் என்று உபசரிப்பார்கள்.



முனிவரும் "அவர்களும் நம்மைப் போல் முனிவர்கள் தான்" என நம்பி அவர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு அவர்களின் குடிலுக்கு வர அசுரர்கள் மேலும் ஒரு சூழ்ச்சி செய்வார்கள்.

முனிவரைக் குடிலுக்குள் இருக்கச் சொல்லிவிட்டு, அசுரர்கள், "நாங்கள் வெளியில் சென்று உங்களுக்கு உணவு கொண்டு வருகிறோம்" எனப் புறப்படுவார்கள்.

வெளியே வந்ததும் வாதாபி உடனே ஓர் கனியாக உருமாறுவான். அதை வில்வலன் முனிவரிடம் கொடுத்து, "இதை சாப்பிட்டு பசியாறுங்கள்" என்பான்.

அவர்களின் கபடு அறியாத முனிவர் அதை உண்மையான கனி என நினைத்துச் சாப்பிட்டு விடுவார். பின்னர் வில்வலன் "வாதாபி வா வெளியே" என்று அழைப்பான்.

கனியாக இருந்த வாதாபி முனிவரின் வயிற்றை கிழித்துக் கொண்டு வெளியே வருவான். முனிவர் இறந்து போவார். பின்னர் இருவரும சேர்ந்து அந்த முனிவரை உண்டு மகிழ்வார்கள்.

இப்படி அவ்வழியே வரும் யாரையும் ஆளுக்குத் தகுந்த மாதிரி சூழ்ச்சி செய்து அசுரர்கள் கொன்று உண்டு வந்தனர்.

இவர்களின் கபட நாடகத்தை நம்பிப் பல முனிவர்கள் பலியாகி வந்தனர். எத்தனுக்கு எத்தன் ஒருவன் வரத்தானே செய்வான்?

அந்நாளில் சிபபெருமானுக்கும் பார்வதிக்கும் கைலயங்கிரியில் திருமணம் நடந்தது. உலக ஜீவ ராசிகள் எல்லாம் அத்திருமணத்தில் பங்கேற்கச் சென்றன. இதனால் உலகின் சமநிலை கெட்டது. வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்து போனது. ஜீவராசிகள் சரிந்து பாதாளத்தில் விழும் நிலை. உடனே சிவபெருமான், குருமுனியான அகத்தியரை அழைத்து "நீ தென் திசை சென்று உலகை சமநிலைப்படுத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அகத்தியரும் அதன்படி தென்திசை வந்தார். வரும் வழியெங்கும் பல அற்புதங்களை செய்து கொண்டு வந்த அவர், வில்வ வனம் வந்தபோது, வழக்கம் போல் வில்வலன், வாதாபி அசுரர்கள் எதிர்பட்டனர். முனிவர் போல் உருமாறியிருந்த அவர்கள் அகத்தியரைக் குடிலுக்கு அழைத்தனர். அவர்களின் அதிகபட்ச முகத்துதியைக் கண்டே அகத்தியர் அவர்களிடம் ஏதோ கோளாறு இருப்பதை உளர்ந்து கொண்டார்.

குடிலின் வெளியே வழக்கம் போல் வாதாபி மாஙகனி ஆனான். வில்வலன் அகத்தியருக்கு அக்கனியைச் சாப்பிடக் கொடுத்தான்.

அவருக்கு அவர்கள் கபட நாடகம் புரிந்தது. அம்மாங்கனியை உண்ட உடனே வயிற்றைத் தடவி "ஜீரணோபவ" (செரித்துவிடு) என்று கூறி மாங்கனியாகயிருந்த வாதாபியை செரிக்கச் செய்து கொன்று விட்டார்.

எப்போதும் போல் வில்வலன் "வாதாபி வா வெளியே" என்றான். ஆனால் இப்போது வாதாபி வர வில்லை. அகத்தியர் மீது கோபம் கொண்ட அவன், தன் சுய உருவைக் காட்டி அவருடன் போரிட்டான். போரில் அவனை வென்று வீழ்த்தினார் அகத்தியர்.



வில்வ வனம் என்பதே மருவி வில்லிவாக்கம் என்றானது. இங்கு அகத்தியரால் உருவாக்கப்பட்ட திருக்கோவில் உள்ளது. இது அகத்தீஸ்வரர் கோவில் என்றழைக்கப்படுகிறது.

இக்கோவிலின் தல வரலாறுகள் மச்ச புராணம், வானம புராணம், லிங்க புராணம், பவிஷ்ய புராணம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளதாம்.

சுவாமி பெயர் அகத்தீஸ்வரர். அம்பாளின் பெயர் சொர்ணாம்பிகை. வில்வமரமே கோவிலின் ஸ்தல விருட்சமாகவுள்ளது.

இங்குள்ள தீர்த்தத்தின் பெயர் அங்காரக தீர்த்தம். இதுவும் பிரசித்தி பெற்ற ஒன்றாகவே உள்ளது.

அங்காரகன் என்றால் செவ்வாய். செவ்வாய் தோஷத்தால் ஏற்படும் தீமைகளை நிவர்த்தி செய்ய மகரிஷிகள் பலர் ஒன்று கூடி யாகம் நடததினர். அதில் விசுவாமித்திரரும் எட்டு திக்குப் பாலகர்களான இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியோர் உள்படப் பலரும் கலந்து கொண்டனர்.

அப்போது "ஓர் தீர்த்தக் குளத்தை அமைத்தால் அதில் நீராடி என்னை வழிபடுவோருக்கு தொந்தரவு தருவதில்லை" என்று அங்காரகன் சம்மதம் தெரிவித்தார். அதன்படி எட்டு திக்குப் பாலகர்களும் கூடித் தீர்த்தத்தை அமைத்தனர்.

கோவிலின் கிழக்கு வாயிலின் நீளவாக்கில் ஏரி போல் அமைந்துள்ளக் குளம் கடும் கோடையிலும் குளத்தில் நீர் நிரம்பியுள்ளது ஓர் ஆச்சரியம் தான். மக்கள் தினமும் குளிக்கவும், துவைக்கவும் செய்கின்றனர். குளத்தைச் சுற்றி படிக்கட்டுகள் உள்ளன. நடுவில் சிதைந்த நிலையில் நீராழி மண்டபமும் உள்ளது. சுற்றுச் சுவர் எடுத்து குளத்தைப் பாதுகாத்து வருகின்றனர்.

குளத்தின் கரையில் அரச மர மேடையில் நாகர்கள் பிரதிஷ்டையுடன் அம்பாள் சன்னதியுள்ளது.

சித்திரை மாதத்தில் பௌர்ணமி, செவ்வாய் கிழமைகளில் இக்குளத்தில் செவ்வாய் கிழமைகளில் நீராடினால் புத்திர தோஷம், செவ்வாய் தோஷத்தால் ஏற்படும் தடைகள் நீங்கும் என்பது ஐதீகம்.

# சிவ தரிசனமே சிறந்த பலன் தரிசனம் !

காலை தொழ அற்றவினைக் கட்டகலும்,
கட்டுச்சி,
வேலை தொழ இப்பிறப்பில்
வெந்துயர்போம், மாலை
வந்து சிவன்தாளை வந்தித்தால்
ஏழ்பிறப்பின்
வெந்துயரம் எல்லாம் விடும்.



# சப்தமும் வேதமும்

சிவபெருமான் நடன கோலத்தில் காட்சி தரும்பொழுது உடுக்கையை தனது வலது கரத்தில் பிடித்திருப்பதைப் பார்த்து இருப்பீர்கள்.

இதனை "துடிடமருகம்" என்று கூறுவார்கள். உடுக்கையிலிருந்து வரும் ஒலியால் அண்டபிண்ட சராசரங்கள் எல்லாம் பெரிய நெருப்பு ஜுவாலையிலிருந்தும், ஊற்று நீரிலிருந்து கொப்பளித்து வரும் குமிழிகளைப் போன்று துஷ்டங்கள் பயந்து ஓடுகின்றன என்பதைக் குறிக்கின்றன.

சப்தத்தில் பிறந்தது உலகம். அதிலே நிலைபெற்று இருப்பது வேதம். இதனைத்தான் இந்தத் தோற்றம் நமக்கு விளக்குகிறது.

# வேதவித்து வேதாரண்யம்

இந்தியாவின் தென்கோடியிலிருக்கிறது வேதாரண்யம் எனும் திருமறைக்காடு திருத்தலம்.

காடாக இருந்த இத்திருத்தலத்து ஈசனை வேதங்கள் வழிபட்டதால் இது திருமறைக்காடு என்று பெயர் பெற்றது. காவிரியின் தென்கரைத் திருத்தலங்களில் இது 125 ஆவது தலமாகும். அம்பாளுக்குரிய 64 சக்தி பீடங்களில் இது சுந்தரி பீடமாகும். நடராஜரின் 16 சபைகளில் இக்கோயிலில் உள்ளது தேவசஸ்தானம் ஆகும். சப்த விடங்கத் தலங்களில் இதுவும் ஒன்று. இங்கு மரகதலிங்கம் விடங்கராக உள்ளது.

பிரம்மா, பிஷ்ணு, இந்திரன் முதலான தேவர்களும், அகத்தியர், நாசிகேது, சுவேத கேது, விஸ்வாமித்திரர், கௌதமர், மனு, மாந்தாதா, தசரதன், வசிட்டர், நாரதர் முதலான ரிஷிகளும், வேதங்களும் வந்து ஈசனை வழிபட்ட தலம் இது.

இக்கோவிலில் வேதவனேசுவரர் சிவலிங்க உருவுக்குப் பின்னர் பார்வதி, பரமேஸ்வரனின் திருவுருவங்களும் உள்ளன. இது மற்ற கோவில்களில் காண முடியாத ஒரு சிறப்பம்சமாகும்.

## அகத்தியருக்கு காட்சி கொடுத்தல் :

சிவனுக்கும், பார்வதிக்கும் கைலாயத்தில் திருமணம் நடந்த போது தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் மற்றும் கோடானுகோடி ஜீவராசிகளும் அவர்களது திருமணத்துக்குச் சென்றதால் உலகின் சமநிலை தடுமாறி வடபகுதி தாழ்ந்தும், தென்பகுதி உயர்ந்தும் போனது.

அதனால் வடதிசையில் இருந்தோர் சறுக்கி, பாதாளத்தில் விழும் நிலை. உடனே சிவன் குறுமுனி அகத்தியரை அழைத்து தென்திசை சென்று உலகினை சமநிலைப் படுதத‌ச் சொன்னார்.

“தென்திசை சென்றால் தங்கள் திருமணத்தைக் காண இயலாதே” என அகத்தியர் வருந்தினார். “நீங்கள் இருக்குமிடத்திற்கே வந்து திருமணக் கோலத்தில் காட்சி தருகிறோம்” என்றார் சிவன்.

அதன்படி அகத்தியருக்கு சிவன் - பார்வதி திருமணக்கோல காட்சி தந்த இடம்தான் திருமறைக்காடு. எனவேதான் சிவலிங்கத்தின் பின்னால் சிவ - பார்வதி

திருமணக்கோலம் உள்ளது.

சிவலிங்கத்திற்கு மட்டுமே தினந்தோறும் அபிஷேகமுண்டு. பின்னால் உள்ள பார்வதி பரமேஸ்வரனுக்கு ஆண்டில் ஒருநாள் அபிஷேகம் செய்து சந்தனக் காப்பு அணிவிக்கிறார்கள். இத்திருத்தலத்துக்கு வந்து வழிபடுபவர்களுக்கு கிரகதோஷம் முதலான எல்லாத் தடைகளும் நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும் என்பது ஐதீகம்.

## எலிக்கு அடித்தயோகம் :

இத்திருத்தலத்தில் ஆதிகாலத்தில் ஒரு நாள் கோவில் பூஜைகள் முடிந்து கதவுகளைப் பூட்டிய பிறகு சன்னதியில் விளக்குத் திரி தீய்ந்து ஒளி மங்கியது. அப்போது பார்வதியிடம் சிவன் "இந்த விளக்கை யார் தூண்டுகிறார்களோ அவர்களுக்கு அடுத்த பிறவியில் மூலோகத்தை ஆளும் பாக்கியம் கிடைக்கும்" என்றார். பார்வதி, "கோவில் பூட்டியாகி விட்டதே. இனி யார் தூண்டப் போகிறார்கள்?" என்றார்.

சிறிது நேரத்தில் ஒரு எலி ஓடி வந்து விளக்கருகில் தாவி அதிலிருந்த நெய்யை உண்ண முயன்றது. மூக்கை உதறியது. அப்போது திரி தூண்டப்பட்டு விளக்கு சுடர்விட்டு உரிந்தது.




ஆம், அந்த எலிதான் அடுத்த பிறவியில் மகாபலிச் சக்ரவர்த்தியாகப் பிறந்தது. அரசர்களின் இணையற்ற அரசனாகி மூலோகங்களைக் கட்டி ஆண்டு, மகாவிஷ்ணுவை வாமன அவதாரம் எடுத்துத் தன்னிடம் கையேந்த வைத்து, வார்த்தை தவறாமல் மூன்று அடி கொடுக்க, தனது ராஜ்யங்களை இழந்து மூன்றாம் அடிக்குத் தலை தந்தது.

## வேதம்பூட்டியது : தேவாரம் திறந்தது :

இங்கு ஈசனை வேதங்கள் பூஜித்து விட்டு பூட்டிய கோவில் கதவுகளைப் பின்னர் யாராலும் திறக்க முடியவில்லை. மக்கள் வேறு வழியாகச் சென்றே ஈசனை வழிபட்டு வந்தனர்.

இந்நிலையில் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமயக் குரவர்கள் நால்வரில் இருவரான அப்பர் என்ற திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் ஒன்று சேர்ந்து பல சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வரும் வழியில் வேதாரண்யம் வந்து சேர்ந்தனர். தங்கள் ஆழ்ந்த பக்தி உணர்வால் பல அரிய செய்லகளைச் செய்து வந்த அவர்களிடம் வேதாரண்யம் மக்கள் கோவில் கதவுகள் திறக்காததைத் தெரிவித்தனர்.



அதனைக் கேட்ட திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் வேதத்திற்கு இணையான தமிழ்மறையைப் பாடி நெடுநாளாக மூடிக் கிடந்த திருக்கதவுகளைத் திறந்தனர்.

"பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்,
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே"

எனத் தொடங்கி 11 பாடல்கள் அப்பர் சுவாமிகள் பாடியதும் கதவு திறந்தது.

"சதுரம் மறை தான்றுதி செய்து வணங்கும் மதுரம் பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தாதுநன் சிறை வைத்தருள் செய்க வெனக்குன் கதவந்திருக் காப்புத் கொள்ளுங் கருத்தாலே" என்று திருஞான சம்பந்தர் பாடியதும் கதவு மூடிக் கொண்டது என்பது பெரிய புராணச் செய்தி.

## கோயிலின் தனிச்சிறப்புகள் :

இத்தலத்தில் உள்ள தென்முக துர்க்கையை வழிபட பில்லி சூனிய பயங்கள் விலகும். கிரகக் கோளாறுகள் நீங்கும் என்பது நம்பிக்கை. ஆறரை அடி உயரத்தில் அழகுப் பதுமையாக உள்ள துர்க்கையைத் தரிசிப்பதே மன

அமைதியைத் தரக் கூடியதுதான்.

இங்குள்ள தியாகேசர் சன்னிதியில் சப்த (ஏழு) விடங்களில் ஒன்றான புவனி விடங்கம் உள்ளது. இவ்விடங்கரின் வண்ணம் பச்சை. நடனம் ஹம்ச (அன்ன) நடனம். இக்கோவிலின் நவக்கிரகங்கள் திசைக்கொன்றாய் பார்த்தபடியில்லாமல் எல்லாம் ஒரே திசையை மேற்கு திசையைப் பார்த்தபடி வரிசையாய் உள்ளன.

இக்கோவிலில் காட்சி கொடுத்த நாதர் என்ற ஐம்பொன் திருமேனி சிற்ப சாத்திரத்தின் உச்ச புகழ் பெற்றது. அதனைக் காண உலகின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வருகின்றனர்.

இககோவிலில் உள்ள கல்வெட்டுகள் மதுரை கொண்ட போப்பர கேசரிவர்மன் "முதலாம் ராஜராஜன்", மூன்றாம் குலோத்துங்க சோழன், திரிபுவனச் சக்ரவர்த்தி, ராஜேந்திர சோழ தேவன், ராஜராஜ தேவன் காலங்களிலும், விஜயநகர அரசர்கள் வீரப்பிரதாப மகாராயர், தேவராய மகாராயர் ஆகியோர் திருப்பணிகளைச் சொல்லுகின்றன. மராத்தி மொழி கல்வெட்டு பிரதாபசிங் மகாராசர், துல்ஜாமகாராசர் பற்றிச் சொல்கிறது.



## பூஜை நீரை ...



- காசி, இராமேஸ்வரம் போன்ற சிவத்தலங்களில் இருந்து சிவலிங்கங்களை வாங்கி வந்து வீட்டில் பூஜித்தால் நற்பலன் கிடைக்கும்.

- சில பக்தர்களின் ஆவி பிரிந்தவுடன் கபாலம் வெடித்து முக்தியடைவர். இதனையே "கபாலமோட்சம்" என்பர்.

- சிவ பூஜை செய்த நீரைக் கால்படாத இடத்திலோ, துளசிச் செடியிலோ கொட்டுதல் நலம்.

சிவாகமத்தில் முறைப்படி தீட்சை பெற்றவரே சிவன் கோயிலில் பூஜை செய்யலாம்.

சிவபெருமானுக்கு சுடுநீரில் திருமுழுக்கு செய்விக்கிற ஒரே திருக்கோயில் திருமுல்லைவாயில்.

ஓம்

# பாவம் போக்கும் ஆலயம் பாபநாசம் பாலைவனநாதர் ஆலயம்

தஞ்சை மாவட்டம் தஞ்சாவூர் - கும்பகோணம் நெடுஞ்சாலையில் பாபநாசத்தினை அடுத்துள்ள திருப்பாலைத்துறை எனுமிடத்தில் 370 அடி நீளமும் 260 அடி அகலமும் கொண்டு அமைந்துள்ளது பாலைவன நாதர் திருத்தலம்.

## சிவனுக்கு புலித்தோல் கிடைத்த இடம் :

புராண வரலாறு : முன் ஒரு காலத்தில் தாருகாவனத்து முனிவர்கள், முழு முதல் கடவுள் அருள் இல்லாமல், முத்தியடைய பெரும் வேள்விகளையும் செய்தனர். இவர்களை நல்வழிப்படுத்த சிவன் பிச்சாடனராகவும், திருமால் மோகினியாகவும் வந்து முனிவர்களை மயக்கினர். இதில் வெறுப்படைந்த முனிவர்கள் கோபம் கொண்டு, வேள்வி செய்து ஒரு புலியை உண்டாக்கி, அதனை சிவன் மீது ஏவினர். இதனை சிவபெருமான் உணர்ந்து புலி தோலை உரித்து, தனது ஆடையாக்கிக் கொண்டார். அது இந்த திருப்பாலைத் துறையில் நடந்தது.

இதே யுகத்தில் சிவபெருமான் நிஷ்டையில் இருந்தார். இமவான் மகளான பார்வதியை மணம் முடிப்பதற்காக, மன்மதன் பூ அம்பினால் சிவனின் நிஷ்டையைக்கலைத்தார். சிவன் தன் விழியால் மன்மதனை எரித்தார். தேவர்கள் வேண்டுகோளின் படி பார்வதியை மணம் செய்து கொண்டார். மன்மதன் எரித்த சாம்பல் மூட்டத்தை பிள்ளையார் கண் முன் அதனை குவித்தார். அதிலிருந்து பண்டாசுரன் தோன்றினான். தேவர்களை துன்புறுத்தினான். தேவர்கள் அம்பிகையிடம் முறையிட்டு வேள்வி செய்தனர்.

அம்பிகை திரபுரசுந்தரியாகத் தோன்றி பண்டாசுரனை அழித்தார். எனினும் வேள்விகுண்டத்தின் வெப்பம் தாங்கமல் சிவனிடம் முறையிட்டனர். சிவன் 'வீரபத்திரன்' உருவெடுத்து தன் தலையில் இருந்த கங்கை நீரை ஊற்றி வேள்விக் குண்டத்தைத் திருக் குளமாக்கினார். அதுவே இன்றுள்ள திருக்குளம்.


திரேதாயுகத்தில் வசிஷ்ட முனிவர் பிரம பட்டம் அடைய, கங்கைக்ரையில் பல ஆண்டுகள் தவம் செய்தார். பலன் கிடைக்கவில்லை. இக் குளத்தில் இருந்தும், காவிரி மணலைக் கொண்டும், அரச மரத்தடியில் சிவலிங்கம் நிறுவினார். இதனை 3 ஆயிரம் முனிவர்கள் பூசித்தனர். சிவபெருமான் காட்சி கொடுத்தார். வசிஷ்ட முனிவருக்கே 'பிரம இருடி' பட்டம் கிடைத்தது. பின்னர் விசுவகர்மா உதவியால் சிவ லிங்கத்திற்கு, வலது பாகத்தில் அம்பாளை நிறுவினர். உலகம் முழுவதும் திடீரென நிலவு ஒளி வீசிற்று. இதனால் அம்பாளை 'தவள வெண்ணகை' அம்பாள் என்று அழைத்தனர்.

துவாபரயுகத்தில், இந்த ஆலயத்தில் அரசமரம் போய் புன்னைமரம் முளைத்தது. வைகாசி மாதம் விசாக நட்சத்திரம் பௌர்ணமி திதியில் திருவைந்தெழுத்து (நமச்சிவாய) தெளிவிக்கப் பெற்று உடல் உயிர்தூய்மை பெற்றனர். பின் திருப்பணி புரிந்து மாசி மாதம் சுக்கில பட்சம், அசுவினி நட்சத்திரத்தில் வாஸ்து சாந்தி செய்து, புனர்பூச நட்சத்திரத்தில் தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தவாரியும் நடத்தினர். இந்திரன் நட்சத்திர மாலையும், வருணன் முத்து மாலையும் அக்கினி பலவித விசித்திர ஆபரணங்களையும், குபேரன் நிறைந்த செல்வத்தையும் வலம்புரிச் சங்கையும் வழங்கினார்கள்.

நான்காம் யுகமான கலிகாலத்தில் ஸ்ரீராமபிரான் வசிஷ்டர் பூஜித்து, உண்டாக்கிய தலம் என கருதி இராமர் இங்கு வந்து வழிபட்டு பின்னர், பாபநாசம் போய் 108 சிவாலயத்தை நிறுவினார்.

**'நெற்களஞ்சியம்'** சிறப்பு : ஆலயத்தில் சோழர் கால திருப்பணி, நாயக்கர் கால திருப்பணிகள் நடந்துள்ளன. 11 வகை கல்வெட்டுகள் உள்ளன. இதில் ஆலயத்தில் நடைபெற்ற பூஜைகள், அதற்காக கொடுக்கப்பட்ட நில சாசனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. செங்கல்லைக் கொண்டு 35 அடி உயரத்தில் வட்ட வடிவமும், சும்பு வடிவும் கொண்டு ஒரு களஞ்சியத்தை கட்டியுள்ளனர்.

இதில் ஒரே நேரத்தில் 3 ஆயிரம் கலம் (105 டன்) நெல்லைக் கொட்டி சேமிக்க முடியும். இது ஆசியா புகழும் வரலாற்று நினைவுச் சின்னமாக விளங்குகிறது. இதனை தமிழ்நாடு அரசு தொல் பொருள் இலாக்கா போர்க்கால அடிப்படையில் செப்பனிட வேண்டும்.



ஆசியா புகழும் நெற்களஞ்சியம் உள்ள பாலைவன நாதர் ஆலயம்

# திரு-கருகாவூர்

காவிரியின் கிளை நதியான வெட்டாற்றின் தென்கரையில் அமைந்த தேவாரத் தலங்களுள் ஒன்று முல்லைவன நாதர் ஆலயம். தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் பாபநாசத்திற்கு தெற்கே 6 கி.மீ. தொலைவிலுள்ள திருக்கருகாவூர் என்ற இடத்தில் 460 அடி நீளமும் 284 அடி அகலமும் கொண்டது இத்திருத்தலம்.

**இத்தல வரலாறு இதுதான்:**

நித்துருவர் என்னும் முனிவர் தன் மனைவி வேதிகையுடன் இத்தலத்தே வந்து மக்கட்பேறு வேண்டி இறைவனை வேண்ட வேதிகை கர்ப்பம் தரித்தாள். வருணன் தான் நடத்தும் யாகத்தில் கலந்து கொள்ள நித்துருவருக்கு அழைப்பு அனுப்ப முனிவரும் அவ்வாறே சென்று யாகத்தில் கலந்து கொண்டார்.

ஊர்த்துவபாதர் என்ற முனிவர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த கர்ப்பவதியான வேதிகையின் குடிலுக்கு வந்து அன்னம் பாலிக்க கேட்டார். வேதிகையோ பதில் கூறவோ அன்னமிடவோ இயலாத நிலையை எடுத்துச் சொல்ல இயலாத நிலையில் இருந்தார். இதனையறியாத முனிவர், வேதிகை தன்னை அவமதிப்பதாக எண்ணி "நோய் பீடிக்கட்டும்" என்று சாபமிட்டுச் செல்ல கர்ப்பம் தளர்ந்து கரு நழுவி விட்டது.

சொல்லமுடியாத துயர் உற்ற வேதிகை இத்தல இறைவனையும் இறைவியையும் வேண்டினாள்.

இறைவி அக்கணமே அந்த கருவை அமுத கும்பத்தில் தாங்கி அருளி, காமதேனுவை அழைத்து சிசுவுக்கு பாலூட்டச் செய்தார். குழந்தை பால் பருகியது. மீதமுள்ள பால் படிந்த இடத்தில் ஓர் அழகிய திருக் குளத்தையும் இறைவி உருவாக்கினார்.

யாகம் முடிந்து திரும்பிய நித்துருவர் இறைவன், இறைவியின் பெருங்கருணையை நினைத்து முல்லைவன நாதருக்கு 'கர்ப்ப புரீஸ்வரர்' என்றும், இறைவிக்கு 'கர்ப்பரட்சாம்பிகை' என்றும் பெயரிட்டு அழைத்துப் போற்றினார்.

கரு - தாயின் வயிற்றிலுள்ள கருவை கா - காத்த ஊர் ஆதலால் கருகாவூர் என்று அழைக்கப் பட்டது.

அப்பர், சம்பந்தர், நாவுக்கரசர், சேக்கிழார் போன்றவர்களால் இத்தலம் பாடி சிறப்பிக்கப் பட்டுள்ளது.



## கற்பூர தீப ஆராதனையில் கவனிக்க வேண்டியவை :

❖ கற்பூர தீபம் இடைவிடாது, பிரகாசமாக வலஞ்சுழித்து எரிவது மிகவும் நல்லது. எரியும் போது தீபம் நடுங்கக்கூடாது.

❖ ஆராதனை முடியும் வரை எரியக்கூடிய அளவுக்குப் போதிய கற்பூரத்தை ஆரத்தியில் நிரப்புவது மிக முக்கியம். தீப ஆராதனையின் போது காற்றால் மோதப்பட்டோ அல்லது வேறு காரணங்களாலோ தீபம் அணைந்து விட்டால் உடனே வேறு கற்பூரத் துண்டுகளை வைத்து எரித்து, மீண்டும் தீப ஆராதனை காட்ட வேண்டும்.

❖ வாயால் ஊதி தீபத்தை அணைப்பது குற்றமாகும். கற்பூர தீபத்தை அணைத்து சத்யம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் அதை மீறவே கூடாது.

❖ கற்பூர தீப ஆராதனையின் போது இறைவனுக்குச் சூட்டிய மலர் கீழே விழுவதும், பல்லி குரல் கொடுப்பதும், மற்றவர்கள் எதேச்சையாக பேசும் நல்ல சொற்களைக் கேட்பதும், இறைவன் திருமுன் வைத்திருக்கும் எலுமிச்சம் பழம் தனக்கு முன் உருண்டு வருவதும் மங்களமாகும்.

❖ வீட்டு பூஜையறையில் கற்பூர தீபம் தானே குளிர்ந்து அடங்குவேத நல்லது. வாயால் ஊதியோ, கையால் விசிறியோ, அணைப்பது பெருங் குற்றமாகும்.

❖ கற்பூர தீபம் எரியத் தொடங்கிய நேரம் முதல் அதுகுளிரும் நேரம் வரை இறைவனது சிலைகளின் படங்கள் முதலிய இறைத் தொடர்பான அனைத்து பொருள்களிலும் தெய்வ சாநித்யம் உச்சநிலையில் விளங்குகிறது. அந்தக் குறிப்பிட்ட சில நொடிகளில் மனப்பூர்வமாக இறை வழிபாடு செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

## முயலகன் இல்லா நடராஜர் !

தவம் செய்தால் சிவனை அடையலாம் என்று அம்பாள் அடையாளம் காட்டிய இடம் மாங்காடு.

●



வடக்குத் திசையையாவது கிழக்குத் திசையையாவது பார்த்து நின்று பூமியில் விபூதி சிறிதளவும் சிந்தாமல், மூன்று விரல்களால் எடுத்து அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி அணிய வேண்டும். காலையும் மாலையும் பூஜைக்கு முன்னும், கோயிலுக்குப் போகும் முன்னும் உறங்குவதற்கு முன்னும் திரு நீறு அணிய வேண்டும்.

●

வயலூரில் உள்ள நடராசர் திருவுருவம் சற்று மாறுபட்டது. இங்கு திருவாசி இல்லை. முயலகன் காலின் கீழ் இல்லை. சடையில் சடைமுடி இல்லை. இதற்கு "சுந்தர தாண்டவம்" என்று பெயர்.

## எங்கும் சிவனே !

மெஸபடோனியா நாட்டில் கங்கையைத் தலையில் தாங்கும் சிவபெருமானுடைய சிலைகள் கிடைத்துள்ளன.

✡

ஆஸ்திரேலியாவில் பழங்குடி மக்கள் இன்னும் சிவபெருமானுக்குரிய விழாவைக் கொண்டாடுகின்றனர்.

✡

சயாம், சுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளில் பல சிவ - விஷ்ணு ஆலயங்கள் உள்ளன. அங்கே இராமாயணம் புகழ் பெற்ற காவியமாக இருக்கிறது.

சிற்ப சாஸ்திர ஆகம விதிப்படி சிவலிங்கம் பின் வரும் மூன்று பகுதிகளைக் கொண்டது. அடிப் பாதம் (பிரம்மபாதம்) நடுப்பாதம் (விஷ்ணு பாதம்) மேல் பாதம் (சிவ பாதம்) இவற்றை முறையே உயிர்ப் பாதம், பெண் பாதம், ஆண் பாதம் என்று கூறுவர்.

# குன்று தோறும் சிவன் !

இமயத்தின் வடமேற்கில் காரகோரம் என்ற மலைத்தொடர் இருக்கிறது. கிழக்குப் பகுதியில் கட்கை, லுஷை, கஷி, காரோ, ஜயின்டியா ஆகிய சிறு குன்றுகள் உள்ளன.

ஒவ்வொரு குன்றிலும் ஒவ்வொரு சிவன் கோவில் உள்ளது. இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து, பூர்வாஞ்சலி மலைக்கோவில்கள் என்பர். ஒவ்வொரு கோவிலிலிருந்தும் சந்நிதிக்கு பின்புறம் சென்றால் ஒரே நேரத்தில் நான்கு கோவிலின் சந்நிதியைக் காணலாம். இங்குள்ள கோபுரங்களின் நிழல்கள் எப்போதும் காலையில் வடமேற்கிலும் நடுப்பகலில் வடக்கிலும், மாலையில் வடகிழக்கிலும் விழுகிறது. நிழல்கள் கோபுரத்தின் மீது விழும் நேரத்தில் கோவில் நடை சாத்தப்படும்.

## சிக்கலில்லா சிக்கல் !

வசிஷ்டர் சிவபெருமானை பூஜித்து, காமதேனுவைப் பெற்று, அதன் பாலில் பெற்ற, வெண்ணையால் லிங்கம் செய்து இத்தலத்தில் வழிபட்டார். அம்பிகையின் பெயர் வேலோன் கண்ணி. இறைவன் பெயர் நவநீரஸ்வரன், மல்லிகாரண்யம் காயாசரஸ் எனவும் அழைக்கப்படும். கோச்செங்கனான் என்ற சோழ மன்னரால் இக்கோவில் கட்டப்பட்டது. இதற்கு 12 - படிகள் உண்டு. கீழ்ப்படியில் உள்ள சுந்தர கணபதியை வணங்கியே மேலே செல்ல வேண்டும். சூரபத்மனை வெல்ல அம்பிகையிடம் வேல் பெற்ற தலம் இதுதான். கந்தசஷ்டிக்கு முதல் நாள் வேல் வாங்கும் இங்கு நடைபெறும். சிக்கலில் வேல்வாங்கி செந்தூரில் வெற்றி பெற்றார். அருணகிரி நாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற தலம் இந்த சிக்கல்.

சிவபெருமானின் தாண்டவ கோலத்தை ஏழுவகைத் தாண்டவ ங்களாகக் குறிப்பிடுகிறார்கள்.

ரட்சா தாண்டவம் காளிகா தாண்டவம் ஆனந்த தாண்டவம் கௌரி தாண்டவம் சந்தியா தாண்டவம் திரிபுரா தாண்டவம் ஊர்த்தவ தாண்டவம்



நடராஜரின் பாதத்தில் கிடப்பவனின் பெயர் என்ன ?

- முயலகன்

உப்பில்லா பிரசாதத்தை எந்தக் கோயிலில் எழுந்தருளி இருக்கும் இறைவனுக்குப் படைக்கிறார்கள் ?

- குடந்தைக்கு அருகில் உள்ள உப்பிலா அப்பன் கோயிலில் எழுந்தருளி இருக்கும் இறைவனுக்குத்தான்.



எந்தக் கோயிலின் பிரகாரத்தை ஏழு முறை சுற்றிவந்தால் அஸ்வமேத யாகம் செய்த பலன் உண்டு ?

- திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி கோயில் பிரகாரத்தைத்தான்.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் 1, 2, 3 தேதிகளில் சூரிய ஒளிக்கதிர் கோயிலில் உள்ள லிங்கத்தின் மீது விழும். இந்தக் கோயில் எங்குள்ளது ?

- கும்பகோணத்திலிருந்து சுமார் 8 மைல் தூரத்தில் உள்ள திருவிசலூர் என்ற ஊரில் இருக்கும் சிவன் கோயிலில் தான் இந்த அற்புதம் நிகழ்கிறது.

மனித உடற்கூறு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட கோயில் எது ? எங்கனம் ?

- சிதம்பரம் கோயில். கோயிலில் வேயப்பெற்ற 21,600 ஓடுகளும் நாம் ஒவ்வொரு நாளும் விடும் மூச்சுகளின் கணக்கைக் குறிக்கின்றன. அந்த ஓடுகளைப் பொருத்தியுள்ள 72,000 ஆணிகள் மனிதனின் நாடிகளின் கணக்கைக் காட்டுகின்றன. இவ்வாறு பொன்னம்பலத்தின் அமைப்பு முழுவதற்கும் சான்றோர்களால் தத்துவ விளக்கம் கூறப்பட்டுள்ளது.

பஞ்சாட்சரம் எவை ?

ஸ்தூலம், சூஷ்மம், காரணம், மகாகாரணம், மகாமனு என்று ஐந்து வகைப்படும்.

ஸ்தூல பஞ்சாட்சரம் - நமசிவாய
சூஷ்ம பஞ்சாட்சரம் - சிவாய நம
காரண பஞ்சாட்சரம் - சிவய நம
மகாகாரண பஞ்சாட்சரம் - சிவ
மகாமனு பஞ்சாட்சரம் - சி

எந்த அரசன் இறைவனை முத்துக்கள் கொட்டி வழிபட்டான் ?

- இராசராசன் தஞ்சை பெரிய கோயில் இறைவனுக்குத் தண்ணீரையும், பாலையும் கொட்டுவது போல முத்துக்களைக் கொட்டி வழிபட்டான்.

நடராஜப் பெருமான் தமிழ் நாட்டில் நடனமாடிய சிறந்த தலங்கள் யாவை ?

திருவாலங்காட்டில் ரத்தின சபை, சிதம்பரத்தில் கனக சபை, நெல்லையில் தாமிர சபை, மதுரையில் வெள்ளி யம்பலம், குற்றாலத்தில் சித்திர சபை ஆகியன ஆகும்.

சிதம்பர ரகசியம் என்றால் என்ன?

சிதம்பர ரகசியம் என்பதன் பொருள் : ஒன்றுமில்லை என்பதுதான்! பஞ்ச பூதலிங்கங்களுள் ஒன்றான ஆகாயலிங்கமாக இறைவன் அந்த ஊரில் குடி கொண்டிருக்கிறார். ஆகாயம் எப்படி உருவமற்றதோ, அதே போல அந்த லிங்கமும் உருவமில்லாது இருக்கிறது. இதைத்தான் சிதம்பர ரகசியம் என்கிறார்கள்.

## அர்த்த நாரீசுவரரின் தத்துவம்

ஆண்டவனுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று வெப்பம், மற்றொன்று குளிர்ச்சி. உஷ்ணம் சிவப்பாயிருக்கும் அது சிவ பெருமானின் பவளமேனி, குளிர்ச்சி பச்சையாக இருக்கும் பார்வதிக்கு மரகதமேனி.

அர்த்த நாரீஸ்வரரின் தத்துவம் இதுதான்.

## மலர்களும் மகேஸ்வரனும் !


கோவாவில் ஐமீபாவளிப் பகுதியில் உள்ள தாமோதர் கோயிலில் வீற்றிருக்கும் சுவர்ணலிங்கத்திற்குத் தினமும் சரியாக 51 மலர்களை மட்டும் பூஜைகளுக்குப் பயன்படுத்துவது வழக்கம். ஐந்து ஐந்தாக பத்து வரிசைகளிலும் ஒரு மலர் மட்டும் கீழுமாகச் சாற்றி அலங்காரம் செய்யப்படும்.

## வடக்கு நோக்கிய சிவன் கோவில் !

சிவன் கோயில் யாவும் கிழக்கு அல்லது மேற்கு நோக்கியே இருக்கும். ஆனால் குளித்தலை என்னும் ஊரில் உள்ள கடம்பவன நாதர் கோயில் மட்டும் வடக்கு நோக்கியிருக்கிறது.

# பக்திக்குப் பரிசு

மார்க்கண்டேயன் சிறந்த சிவபக்தன். அவனுக்கு 16வது வயது முடிந்தவுடன் அவன் ஆயுள் முடிவதாகக் கணக்கிட்டு அவன் மீது குறித்த நேரத்தில் பாசக்கயிற்றை வீசுகின்றான் யமதர்மராஜன். "ஓம் நமச்சிவாய" என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு சிவலிங்கத்தை அணைத்துக் கொள்கிறான் மார்க் கண்டேயன். தன் மீதே பாசக்கயிற்றை வீசிய எமனை தன் காலால் உதைக்கிறார் சிவன். காலம் தவறாமல் கடமையைச் செய்து வரும் கால தேவனைக் காலால் உதைக்கலாமா? இது நியாயமான கேள்வி. யமதர்மன் சர்வேஸ்வரனான சிவனை தினமும்



ஓம் நம சிவாய

# ஆலமரக்குகை ஆஸ்ரமம்
# அறக்கட்டளை

(பதிவுப் பெற்றது 47/87)
18 ஏ, பேகோபுரம், 6 வது தெரு, (மலைச்சாரல்)
திருவண்ணாமலை – 606 601. திருவண்ணாமலை மாவட்டம்.
ஃபோன் : 22135, STD :

**பணிவான வேண்டுகோள்**

அன்புசால் பெரியோர்களே !

வணக்கம். நினைத்தாலே முக்தி தரும் ஸ்தலமான திருவண்ணாமலையில் நம் ஆலமரக்குகை ஆசிரமத்தில் பகவான் ரமண மகரிஷி, பூஜ்ய ஸ்ரீ. ராம்தாஸ் சுவாமிகள் (பப்பா), சற்குரு சுவாமிகள் மற்றும் பல சாதுக்கள் தவம் இயற்றி முக்தியடைந்த விபரம் தங்களுக்குத் தெரிந்ததே !

நம் ஆஸ்ரமத்தில் மாணவ மாணவிகள் ஆசிரியைகள், சாதுக்கள், வருகை தரும் அதிதிகள் அடங்கிய முறையே 50 பேர்களை கொண்ட குருகுலப்பள்ளி மற்றும் ஆசிரமம் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. மேற்படி பராமரிப்புகள் அனைத்துச் செலவுகளும் தங்களைப் போன்ற கனதனவான்கள் அளிக்கும் நன்கொடைகள் மூலம் தான் செய்யப்படுகின்றன. ஆகவே இப்புனித வேள்விப்பணிக்கு தங்களால் இயன்ற பொருளுதவி செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

50 நபர்களுக்கான அன்னதானம் நன்கொடைகள் விபரம் : ஒரு நாள் காலை சிற்றுண்டி ரூ.400 ஒரு நாள் மதிய உணவு ரூ.500 ஒரு நாள் மதிய சிறப்பு விருந்து ரூ.700 ஒரு நாள் இரவு சிற்றுண்டி ரூ.400 ஒரு நாள் மூன்று வேளைக்குச் சேர்த்து ரூ. 1000 கல்வி நன்கொடைகள் : ஒரு மாணவருக்கு ஒரு வருட கல்வி உதவித் தொகை ரூ.2000 ஒரு மாணவருக்கு ஒரு வருட பராமரிப்பு (உணவு, சீருடை, புத்தகம்) ரூ.9000 குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு ரூ.17000 கட்டட நன்கொடைகள் : பள்ளிக்கூடம், மருத்துவமனை, தங்கும் விடுதிகள், மராமத்துப் பணிகளுக்காக ரூ.2000 (இரண்டு ஆயிரம் அதற்கு மேலும்) தனித்தனி அறைகளாகவும் கட்டிக் கொடுக்கலாம். வைப்பு நிதிநன்கொடைகள் : அன்னதான நன்கொடை வைப்பு நிதி ரூ. 5000 மாணவ, மாணவியர் ஒருவருக்கு புத்தகம், சீருடை வழங்க வைப்புநிதி ரூ.5000 பள்ளிக்கூட நிர்வாக வைப்பு நிதி ரூ.5000 ஆஸ்ரம நிர்வாக வைப்பு நிதி ரூ.5000 மருத்துவ சேவை வைப்பு நிதி ரூ.5000.

தங்கள் நன்கொடைகளை ஆலமரக்குகை ஆஸ்ரமம் அறக்கட்டளை என்ற பெயருக்கு செக், டி.டி., எம்.ஓ. மூலம் அனுப்பும்படி அன்புடன் வேண்டிக் கொள்கிறோம். நன்கொடைகளுக்கு வருமானவரி 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு. மேலும் உலக நாடுகளில் வசிக்கும் அனைவருக்கும் நன்கொடை வழங்க மத்திய அரசு அனுமதி எப்.சி.ஆர்.ஏ. அனுமதி வழங்கியுள்ளது அதன் எண். 076030146. ஆகவே அனைவரும் தங்களால் இயன்ற கணிசமான தொகை நன்கொடையளித்து அண்ணாமலையாரின் அருளாசி பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறை பணியில்,

நன்றி, வணக்கம்,

**சுவாமி. சுந்தர்ராமன்**
தலைவர்
ஆலமரக்குகை ஆசிரமம்
அறக்கட்டளை

தானமும், தவமும் தான் செய்வாராகில்
வானவர் நாடு வழி திறக்கும்.

